# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 22 வெள்ளிக்கிழமை (06.01.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 40


# செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கில்

# 6 ஆண்டுகள் கடந்தும் ஏன் நடவடிக்கை இல்லை?

## சட்டமா அதிபர், பொலீஸார் ஆகியோரின் செயலின்மை குறித்து நீதிமன்றம் விசனம்

கொழும்பு, ஜனவரி6

யாழ். குடாநாட்டில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட செம்மணியிலிருந்து டசினுக்கும் அதிகமான மனித எலும்புக் கூடுகள், எச்சங்கள் தோண்டி எடுக்கப்பட்டு ஆறு வருடங்களாகியும் அது தொடர்பான வழக்கில் உரிய நடவடிக்கைகள் இன்னும் எடுக்கப்படாதது ஏன்? இவ்விவகாரம் இழுத்தடிக்கப்படுவது எதற்காக?

- இவ்வாறு பெரு விசனத்துடன் சட்டமா அதிபர் திணைக்களத்தையும், குற்றப் புலனாய்வுப் பொலிஸாரையும் கடிந்து கொண்டிருக்கிறார் கொழும்பு சிரேஷ்ட மாஜிஸ்திரேட் குசல சரோஜினி வீரவர்த்தன.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கிளைமோர் இரு சிப்பாய்கள் படுகாயம்

வவுனியா,ஜன.6

வவுனியா தேவகுளம் என்ற இடத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய்கள் இருவர் படுகாயமடைந்தனர்.

இராணுவத்தினரின் டிராக்டரே கிளைமோர் கண்ணியில் சிக்கியது. காயமடைந்தவர்கள் உடனடியாக வவுனியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தையடுத்து தேவகுளம் பகுதியில் இராணுவத்தினர் தேடுதல்களை நடத்தினர். இதன்போது மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-க-6-164)

## நகரில் முன்னிரவு குண்டுச்சத்தம் படையினர் சரமாரியாக வேட்டு

யாழ்ப்பாணம்,ஜன.6

யாழ்.நகரப் பகுதியில் நேற்று முன்னிரவு கேட்ட குண்டுச் சத்தத்தையடுத்து நகரப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது.

யாழ். ஸ்ரான்லி வீதியும் கஸ்தூரியார் வீதியும் சந்திக்கும் பகுதியில் - பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ள இராணுவக் காவலரண் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தகவல் ஒன்று தெரிவித்தது. எனினும் நகரில் நிலவிய அசாதாரண சூழ்நிலைமையினால் அதனை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

இதேவேளை, நேற்றிரவு 9 மணியளவில் யாழ்.புனித மரியாள் தேவாலயத்துக்கு அருகிலுள்ள முகாம் பகுதியிலும் சங்கானை நகருக்கு சமீபமாகவும் குண்டு வெடிப்புச் சத்தங்களும் அதனைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டன என்றும் - ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில் - யாழ்.முலவைச்சந்தி, வண்ணை சிவன்கோயிலடி ஆகிய பகுதிக

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்த தமிழ் மாணவரது இறுதி நிகழ்வு

திருகோணமலை,ஜன.6

திருமலையில் கடந்த திங்கட்கிழமை சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் மாணவர்கள் ஐந்து பேரின் இறுதிக்கிரியைகள் நேற்று தமிழர் தாயகத்தின் தலைநகரில் பெருந்திரளான மக்களின் கண்ணீர் அஞ்சலிக்கு மத்தியில் நடைபெற்றது.

முன்னதாக, கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களினதும் பூதவுடல்கள் நேற்றுக்காலை திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

நேற்றுக்காலை வேளையில் பெய்த கடுமையான மழையையும் பொருட்படுத்தாமல் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் சமூகத்தினர், பொதுமக்களெனப் பெருந்திரளானோர் திரண்டுவந்து பூதவுடல்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ள வருகைதந்த பெரியவர்கள், மதத் தலைவர்கள், பாடசாலைகளின் ஆசிரியர் சமூகத்தின் முக்கிய பிரதிநிதிகள் இரங்கலுரைகளை ஆற்றினர்.

இதன் பின்னர், சுட்டுக்கொல்லப்பட்ட மாணவர்களான யோகராஜா ஹேமச்சந்திரன், சண்முகராஜா (14 ஆம் பக்கம் பார்க்க)



ஐந்து மாணவர்களதும் உடல்களைத் தாங்கிய ஊர்தி இறுதிப் பயணத்தை ஆரம்பித்த போது... (மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்)

## இலங்கை விடயத்தில் இந்தியா தலையிடாது



### அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

சென்னை,ஜன.6

இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடாதெனத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார் இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி.

நேற்று தமிழகத்திற்கான பயணமொன்றை மேற்கொண்டிருந்த இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, சென்னை கோபாலபுரத்தில் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசினார்.

பின்னர் இலங்கைப் பிரச்சினை உட்பட பல விடயங்கள் குறித்துச் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட பாதுகாப்பு அமைச்சர் முகர்ஜி,

இது விடயத்தில் இந்தியாவுக்கு தனிக் கொள்கை இருப்பதாகவும், அடுத்த நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற கொள்கையை புதுடில்லி தொடர்ந்தும் கடைப்பிடித்து வருவதாகவும் கூறினார். (எ-க)

## பேச்சு முயற்சிகளில் அரசு திறந்த மனதுடன் செயற்படும்

### அமைச்சரவைப் பேச்சாளர்

கொழும்பு,ஜன.6

அமைதிப் பேச்சுகளை நடத்தும் விடயத்தில் விடுதலைப் புலிகளுடன் திறந்த மனதுடன் செயற்பட எப்போதுமே தயாராகவே இருப்பதாக அரசு நேற்று அறிவித்திருக்கிறது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டின் போது தகவல், ஊடகத்துறை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மகாராஜா நிறுவனத் தலைவரைக் கொல்ல சதி செய்தமை குறித்து விசர்ரணை ஆரம்பம்

கொழும்பு,ஜன.6

எம்.ரி.வி., எம்.பி.ஸி. ஊடக நிறுவனங்கள், மகாராஜா கூட்டு நிறுவனம் ஆகியவற்றின் தலைவரைக் கொலைசெய்வதற்கு சதித்திட்டம் தீட்டப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து குற்றப் புலனாய்வுத் துறைப் பொலீஸார் உரிய விசாரணை நடத்துவதற்கு கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இந்த விவகாரம் குறித்து குற்ற புலனாய்வுப் பிரிவின் இன்ஸ்பெக்டர் ஸி.ஆர்.பெரேரா நேற்று கொழும்பு மேலதிக நீதிவான் முகமட் இர்ஷட்டின் முன்னிலையில் விசேட அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தார்.

'எஸ்-லோன்' நிறுவனத்தின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரியான அனில் சந்திர சிறி சில்வா இந்த விடயம் குறித்து குற்றப் புலனாய்வுப் பொலீஸாருக்கு முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தார் என்றும் -

அதன் அடிப்படையிலேயே பொலீஸார் மேற்படி அறிக்கையை நீதிமன்றத்தில்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் பிரதேசங்களில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பு

திருகோணமலை,ஜன.6

திருகோணமலையில் கடந்த திங்கட்கிழமை தமிழ் மாணவர்கள் ஐந்துபேர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும், துக்கம் தெரிவித்தும் நேற்று மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தாலினால் வடக்கு - கிழக்கின் பெரும்பாலான மாவட்டங்கள் முற்று முழுதாக ஸ்தம்பிதமடைந்தன.

நேற்றைய இறுதிக்கிரியை தினத்தையொட்டி திருகோணமலை நகரெங்கும் கறுப்பு, வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. நேற்றைய தினமும் நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டதுடன் அனைத்துக் கடைகளும் மூடப்பட்டிருந்தன.

அதேபோல் திருகோணமலையில் மக்களின் இயல்பு வாழ்வும் முற்றுமுழுதாக ஸ்தம்பிதமடைந்திருந்தது.

வவுனியாவில்...

இதேவேளை, திருமலை மாணவர்கள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## திருமலையில் கொலையுண்ட அப்பாவித் தமிழ் இளைஞர்களின் இறுதிப் பயணத்தில்...



மாணவர்களின் உடல்கள் மீது வீழ்ந்து புரளும் உறவுகள்...



இறுதி அஞ்சலியைத் தொடர்ந்து மயானம் நோக்கிய பயணத்தில்...

# திருமலையில் பலியான மாணவருக்கு யாழ். பல்கலையில் நேற்று அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஜன.6

திருகோணமலையில் கடந்த 2ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்ட ஐந்து தமிழ் மாணவர்களுக்கு அஞ்சலி தெரிவிக்கும் நிகழ்வு ஒன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்றது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் என்.விஜயரூபன் தலைமையில் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஈகச்சுடரினை துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் ஏற்றிவைத்தார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து அஞ்சலி உரை இடம்பெற்றது.

அஞ்சலி உரையை துணைவேந்தார் நிகழ்த்தினார். தொடர்ந்து மலர் வணக்கம் இடம் பெற்றது.

அஞ்சலி உரைகளை பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தலைவர் எஸ். சிவானந்தமூர்த்தி, தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், கலைப்பீட மூன்றாம் வருட மாணவன் எஸ்.லக்ஸ்மன், மாணவர் ஒன்றியத் தலைவர் விஜயரூபன் ஆகியோர் நிகழ்த்தினர். இந்த நிகழ்வில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ-12)

## அவசர நோயாளர்களையும் ஆஸ்பத்திரிக்கு இரவில் கொண்டுசெல்ல மக்கள் அச்சம்

### இதனால் சிறுமி ஒருத்தி நேற்று பரிதாப மரணம்

யாழ்ப்பாணம்,ஜன.6

குடாநாட்டில் படையினர் மீதான அச்சம் காரணமாக அவசர நோயாளர்களைக் கூட இரவில் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்வதற்கு மக்கள் தயங்குகின்றனர்.

இதனால், அநியாய உயிரிழப்புகள் ஏற்படும் சம்பவங்களும் குடாநாட்டில் ஆங்காங்கே இடம் பெற்று வருகின்றன. இவ்வாறான தொரு பரிதாப மரணம் ஊரெழு கிழக்கில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றிருக்கிறது.

அங்கு நடந்தது இதுதான்:-

ஊரெழு கிழக்குப் பகுதியில் உள்ள தனது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தாள் சிவயோகராஜா சரண்யா என்ற 2 வயதுச் சிறுமி.

இரவு 11.30 மணியளவில் படுக்கையில் வைத்து வெள்ளைப் பூரான் ஒன்று சரண்யாவைக் கடித்துவிட்டது.

ஊரெழுப் பகுதி வீதிகளில் படையினர் அதிகளவில் நின்று கொண்டிருந்ததால் சிறுமியை உடனடியாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லத் தயங்கிய பெற்றோர் இரவு தமக்குத் தெரிந்த கை வைத்தியத்தைச் செய்துவிட்டு காலையில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லத் தீர்மானித்தனர்.

நேற்றுக்காலை சரண்யா யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாள். அங்கு சரண்யாவுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும், சிகிச்சை பயனளிக்காது சிறுமி சரண்யாவின் உயிர் பிரிந்தது. வெள்ளைப் பூரான் கடியினால் சிறுமியின் உடலில் ஏற்பட்ட விஷம் இரவு உடல் முழுவதும் பரவியதாலேயே சிறுமியைக் காப்பாற்ற முடியாமல் போனது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறுமியின் சடலம் மரண விசாரணையின் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

சமீபத்தில் நீர்வேலி கரந்தன் சந்திப் பகுதியில் இரவுவேளை நோயினால் அவதிப்பட்ட தமது குழந்தையை ஓட்டோ ஒன்றில் யாழ்.ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்த கணவனும் மனைவியும் படையினரின் கண்மூடித் தனமான துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தமை தெரிந்ததே. (3-15-78)

# குடித்தொகை டிப்ளோமா பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.6

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட குடித்தொகை அபிவிருத்திக்கான பின்பட்ட டிப்ளோமா பரீட்சையின் முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சையில் விசேட சித்தி மற்றும் சித்தி பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

விசேட சித்தி -

எஸ்.அப்பாபிள்ளை, எஸ்.ஜெகந்தன், எஸ்.மதிரூபன், செல்வி எஸ். பழனி, செல்வி வி.பொன்னு, செல்வி பி.ராஜேந்திரம், செல்வி ஏ.செல்வராஜ்.

சித்தி -

ரி.ஜெயக்குமார், எஸ்.ஜெயந்தன், என்.காசி வேந்தன், செல்வி ஆர்.மார்க்கண்டு, எம்.பிரதீபன், எஸ்.பிரதீபன், செல்வி பி.ரட்ணவேலு, ரி.சந்திரகாசன், என்.சர்வேஸ்வரன், ரி.தவசேகர், திருமதி எஸ். தேவேந்திரன். (3-204)

## கிழக்குப் பல்கலை 'எம்.ஏ' விரிவுரை ஒத்திவைப்பு

மட்டக்களப்பு,ஜன.6

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நாளை சனிக்கிழமை ஆரம்பமாக விருந்த எம்.ஏ கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் பிற்போடப்பட்டுள்ளன என்று கிழக்குப் பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி எஸ்.பாலசுகுமார் தெரிவித்தார்.

தமிழ்,புவியியல்,நுண்கலை,நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களில் எம்.ஏ பட்டம் வழங்கும் பொருட்டு இந்த விரிவுரைகள் ஆரம்பமாக இருந்தன என்றும் -பீடாதிபதி மேலும் கூறினார். (எ)

## மழை தொடரும் என்று அறிவிப்பு

வலி.கிழக்கு,ஜன.6

நேற்று ஆரம்பித்த மழை இன்னும் ஓரிருதினங்களுக்குத் தொடர்ந்து பெய்யும் அறிகுறிகள் இருப்பதாகத் திருநெல்வேலி வானிலை ஆராய்ச்சி நிலைய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

குடாநாட்டில் நேற்று மட்டும் 61.2 மில்லிமீற்றர் மழை பெய்தது என்றும்-கூறப்பட்டது.

(எ-180)

## கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடத்தும் தமிழ்த்திறன் தேர்வு

யாழ்ப்பாணம்,ஜன.6

கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ்த்திறன் எழுத்துத் தேர்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு யாழ். மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்த சகல பாடசாலை மாணவர்களையும் தவறாது தோற்றுமாறு பரீட்சை ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

இந்தப் பரீட்சை கடந்த 28 ஆம் திகதி நடைபெறவிருந்தமை தெரிந்ததே.

(எ-6)

## ஈழத்துச் சிதம்பர உற்சவம் குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.6

காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலயத்தின் வருடாந்த திருவாதிரை உற்சவம் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

திருவாதிரைத்தேர்திருவிழா, ஆருத்திரா தரிசனம் முதலிய திருவிழாக்காலங்களில் ஆலயத்துக்கு சமூகம் தரவிருக்கும் பத்தர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பது தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படும் என்றும் -

சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு - காரைநகர் உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (எ)

## மேஜர் ஜெயானந்தனின் வித்துடல் முழங்காவில் துயிலுமில்லத்தில் விதைப்பு



கிளிநொச்சி,ஜன.6

மன்னாரில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கடந்த 3ஆம் திகதி இடம் பெற்ற கிளைமோர் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வவுனியா மேற்குப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் மேஜர் ஜெயானந்தன் மற்றும் நாட்டுப்பற்றாளர் தேவராஜன் வினோதன் ஆகியோரின் வித்துடல்கள் நேற்று விதைக்கப்பட்டன.

மேஜர் ஜெயனாந்தனின் வித்துடல் முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்திலும், நாட்டுப்பற்றாளரின் வித்துடல் கோவில் குஞ்சுக் குளம் இந்து மயானத்திலும் விதைக்கப்பட்டன.

இதற்கு முன்னதாக அஞ்சலிக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் புளியங்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனும், ஈகச்சுடரினை மேஜர் ஜெயானந்தனின் மனைவியும் ஏற்றிவைத்தனர். மாவீரருக்கான மலர்மாலையை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் அணிவித்தார். நினைவுரையை தூயவன் அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

(எ-6-14)

## பல்கலைச் சூழலில் அமைதி பேணுவது குறித்து கண்காணிப்புக் குழுவுடன் மாணவர்கள் பேச்சு

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ். பல்கலைக்கழகச் சூழலில் அமைதி நிலையைப் பேணுவது குறித்து கண்காணிப்புக் குழுவுக்கும் மாணவர் குழுக்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முற்பகல் இடம்பெற்றது.

கோயில் வீதியில் அமைந்துள்ள கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் நடந்த இந்தச் சந்திப்பில் மாணவர் ஒன்றியத் தலைவர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், பிரதிநிதிகள் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ், யாழ். அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

பல்கலைக் கழகச் சூழலில் சுமுகமான கற்றல் செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடவும் -

மருத்துவமாணவர்கள் வைத்திய சாலையில் கிளினிக்குகளில் பங்குபற்றல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கவும் -

படையினரின் நெருக்குவாரங்கள் இருக்கக் கூடாது என்று மாணவர்தரப்பில் கேட்கப்பட்டது.

படையினரின் பிரசன்னம், சோதனை நடவடிக்கைகள் காரணமாக மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனவும் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் வரையறைக்குள் தாங்கள் செயற்படமுடியும். கலவரங்கள் நடைபெறும் போது அமைதியை ஏற்படுத்த பொலீஸார் போன்று செயற்பட முடியாது. என்று கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

பல்கலைக் கழகச் சூழலில் அமைதி நிலை காணப்படும் போது நேரில் அங்குவந்து சுமூகநிலையைத் தோற்றுவிக்க ஏற்பாடு செய்ய முடியும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

தொடர்ந்து மாணவர் பிரதிநிதிகளுடன் சந்திப்புக்களை நடத்த ஏற்பாடு செய்வதாக கண்காணிப்பாளர்கள் உறுதி தெரிவித்தனர்.

(எ-3-12)

## கிரானில் நேற்று ஒருவர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜன.06

மட்டக்களப்பு கிரான் பகுதியில் படையினரால் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை கிரான் பகுதியிலுள்ள இராணுவக் காவலரண் மீது கைக்குண்டுத் தாக்குதலை மேற்கொள்ள முற்பட்டபோதே படையினரால் இவர் சுட்டுக்கொல்லப்பட்டாரெனப் படைத் தரப்பால் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (எ-க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# பேச்சுக்கான புறநிலைகள் குழம்பினால் விபரீதம் நேரும்

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வைக் காண்பதற்கான பேச்சுகளை எங்கே நடத்துவது என்ற விடயம் இழுபறிப்படுவது ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் அந்த விவகாரத்தில் வேறு ஒரு புதிய சிக்கல் இப்போது உருவாகியிருக்கின்றது.

அமைதிப் பேச்சுகளை நடத்துவதற்கான புறச்சூழ்நிலை - சம்பந்தப்பட்ட தரப்புகள் இடையே தோதான நல்லுறவு - இருக்கின்றதா என்பதே புதிய கேள்வியாகப் பிறந்திருக்கின்றது.

ஒரு மேசையில் சமதரப்பினராக அமர்ந்திருந்து பேசுவதற்கான புரிந்துணர்வு நிலை இருதரப்பினருக்கும் இடையில் இல்லாத சூழல். இரு தரப்புப் பிரதிநிதிகளும் நேருக்கு நேர் அமர்வதில் அர்த்தம் ஏதும் இல்லை. அதனால் ஆக்கபூர்வமான பயன் ஏதும் கிட்டப்போவதுமில்லை.

மாறாக, ஒரு வெறுப்புடனும் பகையுணர்வோடும் ஒரு மேசையில் இரு தரப்பும் சந்தித்தால் அவை தத்தமது பக்க நியாயங்களை பேச்சு மேசையில் வலியுறுத்துவதோடு, எதிர்த்தரப்பின் நியாயமற்ற போக்கையும் போட்டுடைத்து, மேலும் முரண்பட்டுப் பிணக்குப்பட்டு, எதிர்ப்புணர்வு வலுப்பெறவே அந்தப் பேச்சு முயற்சி வழிசெய்யும்.

தமிழ் மக்கள் மீது இராணுவ நெருக்குவாரங்கள், கெடுபிடிகள் போன்றவற்றைக் கட்டவிழ்த்துவிட்டு, அவர்களின் வழமையான வாழ்வுநிலை மீது கடுமையான - கொடூரமான - அழுத்தங்களைப் பிரயோகித்து, அவர்களை அமுக்கிக்கொண்டு, மறுபுறத்தில் அந்த மக்களின் ஏக - அதிகாரபூர்வ- பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளோடு அமைதிப் பேச்சு நாடகத்தை நடத்தலாம் என்று இலங்கை அரசுத் தலைமை கனவு காணக்கூடாது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்தப் புதிய அரசு முற்றும் முழுதாக பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் அத்திபாரத்தில்தான் - பலத்தில்தான் - கட்டியெழுப்பப்பட்டது என்பது யாவரும் அறிந்த உண்மை.

அத்தகைய பௌத்த, சிங்கள மேலாண்மைப் போக்குப் பின்னணியைக்கொண்ட இந்த அரசு, இலங்கையின் ஐந்து தசாப்தகால இனப்பிணக்குக்கு அமைதி வழியில் - சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு நியாயம் வழங்கக்கூடிய - இணக்கத்தீர்வு ஒன்றைக் காண விரும்புகின்றது என்றால், முதலில் அது தனது மேலாண்மைப் போக்குக் கடும் கோட்பாட்டு நிலையில் இருந்து கீழே இறங்கி வந்து, பேச்சு மூலமான அமைதித் தீர்வில் தனக்கு நாட்டமும் பற்றுறுதியும் உள்ளன என்பதைக் காட்டும் வகையில் சமாதான சமிக்ஞைகளை வெளிப்படுத்தவேண்டும். அப்படி வெளிப்படுத்தினால்தான் அது அமைதிப் பேச்சுக்கான புறச்சூழலை - புறநிலைமையை - ஏற்படுத்துவதாக இருக்கும். நீதியான தீர்வு ஒன்றைப் பெற்றுத் தரக்கூடிய நியாயமான பேச்சுகள் நடைபெறும் என்ற நம்பிக்கையை உருவாக்குவோம்.

ஆனால், அத்தகைய சமிக்ஞைகள் ஏதும் - வெளிப்பாடுகள் எவையும் - புதிய அரசிடமிருந்தோ அதன் தலைமையிடமிருந்தோ தமிழர் தரப்புக்கு வருவதாக இல்லை.

அவற்றுக்கு மாறாக, தமிழர் தாயகத்தில் ஜனநாயக வழியில் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்த முயன்ற பல்கலைக்கழகச் சமூகத்தவர்கள் அடித்து, சுட்டுக் கலைக்கப்படுகின்றார்கள்; அப்பாவித் தமிழ் மாணவர்கள் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர் 'பயங்கரவாதி' களாக்கப்படுகின்றனர். தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துள்ள அரச படைகளின் தமிழ் மக்கள் எதிர்ப்பு அட்டகாசம் எல்லை மீறுகின்றது. எல்லா இடங்களிலும் பொது மக்கள் கண்மண் தெரியாமல் தாக்கப்படுகின்றனர். ஒட்டுமொத்தத்தில் தமிழ் மக்களின் வெகுஜன எழுச்சியை ஆயுத முனையில் அடக்கும் அரச படைகளின் திட்டமிட்ட ஒடுக்குமுறைப்போக்கே அரசுத் தரப்பிலிருந்து கட்டவிழ்த்து விடப்பட்டு வெளிப்படுகின்றது.

வெளிவேஷத்திற்கு அமைதிப் பேச்சுகள் என்று கூறிக்கொண்டு உள்ளே இராணுவச் சதித்திட்டத்தை கபடமாகக் கொண்டிருந்தால் அமைதி முயற்சிகளுக்கான சமாதான சமிக்ஞைகளை அரசுத்தரப்பு வெளிப்படுத்துவது கஷ்டமானதாகவே இருக்கும்.

ஈழத்தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு அமைதி வழித்தீர்வு காண்பதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசுக்கு பற்றுறுதியும், திடசங்கற்பமும் உண்மையில் இருக்குமானால் அதைப் பகிரங்கமாக வெளிப்படுத்தும் விதத்தில் அது நடந்துகொள்ளவேண்டும்.

மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டும் விலாங்கு போல தென்னிலங்கையில் பௌத்த, சிங்களப் பேரினவாதிகளுக்கு தனது மேலாதிக்கப் போக்குத்தோற்றத்தையும், தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் வாழும் மக்களுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் அமைதிவேஷத்தையும் காட்டுவதன் மூலம் சமாதான முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் நகர்த்த முடியாது என்பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புரிந்துகொள்ளவேண்டும். இத்தகைய இரட்டை வேடப்போக்கு மேலும் நிலைமையை விபரீதமாக்கும் என்பதை அவர் உணர்ந்துகொள்ளவேண்டும்.

அமைதிப் பேச்சுக்கான சூழ்நிலையை - புறநிலையை - அரச படைகளின் கடும்பிடிப்போக்கால் மேலும் சீர்கெட அனுமதித்தால் மீண்டும் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு வாய்ப்பே இல்லை என்ற மோசமான நிலைமை ஏற்பட்டுவிடும்.

அமைதிப் பேச்சுக்கான இடத்தைத் தீர்மானிப்பதல்ல இப்போது முக்கியம். அதற்கான புறநிலைமைகள் குழம்பிவிடாமல் பார்த்துக்கொள்வதுதான் அதைவிட முக்கியமானது. இலங்கை அரசுத் தரப்புக்கு அது புரிந்தால் சரி.

# நிர்வாக சேவைப் பரீட்சை ஜன. 28 இல் கொழும்பில் மட்டுமே நடைபெறுமாம்

கொழும்பு,ஜன.6

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆள்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கின்றது என பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறமாட்டாது என்றும் அவர் தகவல் வெளியிட்டார்.

இந்தப் பரீட்சை கடந்த மாதம் யாழ்ப்பாணம் உட்பட நாடளாவிய ரீதியில் 28ஆம் திகதி நடைபெறவிருந்தது. பின்னர் இந்தப் பரீட்சை திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்தப் பரீட்சை தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது அவர் கூறிய தாவது:-

மேற்படி பரீட்சை எதிர்வரும் 28ஆம் திபதி நடத்த ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது. கொழும்பில் மட்டுமே இப்பரீட்சை நடைபெறும்.

இந்தப் பரீட்சைக்கான நிலையம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவ இது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டிருந்த போதும் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக அங்கு பரீட்சையை நடத்துவதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக அமைச்சின் வுறுத்தலுக்கு அமைய அந்த வர்த்தமானியில் பரீட்சை நிலையம் தொடர்பாக மாற்றம் செய்யப்படும் - என்றார் அவர்.

கல்வி நிர்வாக சேவைக்கு ஆள்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சையை அடுத்தமாதம் 11ஆம் திகதியளவில் கொழும்பில் நடத்தப்படலாம் என்றும் -

ஆனால், அந்தத் திகதி உறுதி செய்யப்படவில்லை என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-3)

# 'ஹலோ ரஸ்ட்' நிறுவனத்தின் செயற்பாடுகள் எதிர்வரும் 9ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம்,ஜன.6

கடந்த ஒருவார காலமாகக் குடாநாட்டில் மிதிவெடியகற்றும் செயற்பாட்டை இடைநிறுத்தியிருந்த 'ஹலோ ரஸ்ட்' நிறுவனம் எதிர்வரும் 9ஆம் திகதி முதல் மீண்டும் தனது பணியை ஆரம்பிக்கவுள்ளது.

எனவே ஊழியர்கள் அனைவரையும் அன்று காலை 9 மணிக்கு நிறுவன வளாகத்தில் நடைபெறும் அணிவகுப்பில் கலந்துகொள்ளுமாறு 'ஹலோ ரஸ்ட்' இன் இலங்கைக்கான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் எட்வேட் ரோவே அறிவித்துள்ளார்.

நல்லூரில் அமைந்துள்ள 'ஹலோ ரஸ்ட்' நிறுவனத்தின் வளாகத்துக்குள் பகல் வேளையில் நுழைந்த இனந்தெரியாத நபர்கள் சிலர் அங்கிருந்து இரண்டு வாகனங்களைக் கடத்திச் சென்றதுடன் பெறுமதியான பொருள்களையும் அபகரித்துச் சென்றனர். இதன் பின்னர் வாகனங்கள் இரண்டும் மீட்கப்பட்டன. ஏனைய பொருள்கள் மீட்கப்படவில்லை.

இந்தச் சம்பவத்தையடுத்து யாழ்ப்பாணத்தில் தனது மிதிவெடி அகற்றும் செயற்பாட்டை தற்காலிகமாக இடைநிறுத்திக்கொண்ட 'ஹலோ ரஸ்ட்' நிறுவனம் வளாகத்திலிருந்து வாகனங்களையும் பெறுமதியான பொருள்களையும் இராணுவத்தினரிடம் கையளித்தது.

அபகரித்துச் செல்லப்பட்ட பெறுமதியான பொருள்கள் இதுவரை மீட்கப்படாத நிலையிலும் தமது நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களின் நலனில் அக்கறை கொண்டு செயற்பாட்டைத் துரிதப்படுத்தும் நோக்குடனும் மிதிவெடி அகற்றும் பணியை மீள ஆரம்பிக்கவுள்ளதாகக் 'ஹலோ ரஸ்ட்' நிர்வாகம் தெரிவித்தது.

பணிகளை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட வாகனங்களும் பெறுமதியான பொருள்களும் இன்று வெள்ளிக்கிழமை பலாலியிலிருந்து நிறுவன வாளகத்துக்கு எடுத்துவரப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் 9ஆம் திகதி முதல் நிறுவனச் செயற்பாடுகள் அனைத்தும் வழமையான முறையில் நடைபெறும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

'ஹலோரஸ்ட்' நிறுவனத்தில் நடைபெற்ற கடத்தல் சம்பவம் தொடர்பாகப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். சிலர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (8)

# கல்வி நிலைய உரிமையாளர் கடந்த செவ்வாய் முதல் மாயம்

கரவெட்டி,ஜன.6


தனியார் கல்வி நிலைய உரிமையாளர் ஒருவரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

நெல்லியடி இராசகிராமம் வீதியில் உள்ள 'சயன்ஸ் சென்ரர்' கல்வி நிலையம், யாழ். வீதியில் ஈ.பி.டி.பி. அலுவலகம் அருகே உள்ள 'மொடேர்ண் கல்வி நிலையம் ஆகியவற்றின் உரிமையாளரான இராசரட்ணம் சேவச்சந்திரன் (வயது30) என்பவரையே கடந்த செவ்வாய்கிழமை முதல் காணவில்லை என்று கூறப்படுகிறது.

அன்றையதினம் முற்பகல் 11.30 மணியளவில் வீட்டுத் திருத்தப் பணிக்காக வேலையாளர்களைச் சந்திக்க மோட்டார் சைக்கிளில் இவர் புறப்பட்டுச் சென்றார். அதன் பின்னர் இவர் வீடு திரும்பவில்லை என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் காணாமற்போனமை குறித்து நெல்லியடிப் பொலீஸ் நிலையம், பருத்தித்துறை இராணுவ முகாம், மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றில் முறையிடப்பட்டுள்ளதாக அவரது குடும்பத்தினர் கூறினர்.

(ஒ-70)



சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்தநாள் அற நிதியம் சார்பில் தமிழ்த்துறையில் சிறப்புப் பட்டம் பெறும் மாணவருக்கு வழங்கப்படவுள்ள இரண்டு லட்சம் ரூபாவுக்கான காசோலையை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸிடம் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவஸ்தான நிர்வாக சபைப் பொருளாளர் அ.சண்முகநாதன் கையளிப்பதையும், அக்காசோலையை உத்தியோகபூர்வ நடவடிக்கைக்காக கல்விப் புல உதவிப் பதிவாளர் திருமதி ஜெ.தயானந்தனிடம் துணைவேந்தர் வழங்குவதையும் படங்களில் காணலாம். தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, ஊடகவளங்கள் பயிற்சி நிலைய இணைப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், துர்க்கா தேவஸ்தான இணைச் செயலாளர் ஆறு. திருமுருகன் ஆலய நிர்வாக அலுவலர் கா. சிவபாலன் ஆகியோரும் படங்களில் காணப்படுகின்றனர். *(படங்கள்: சுதா)*

# பல்கலை தமிழ்த்துறையில் சிறந்த மாணவருக்கு ரூ.2 லட்சம் பரிசு

யாழ்ப்பாணம்,ஜன.6

சிவத்தமிழ்ச் செல்வி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பிறந்தநாள் அற நிதியம் சார்பில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறையில் சிறப்புப் பாடம் பயிலும் மாணவர்களில் அதிதிறமையான மாணவருக்கு இரண்டு லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது. இதற்கான காசோலையை யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்திடம் வழங்கும் நிகழ்வு நேற்று துணைவேந்தர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

நேற்றுமுற்பகல் 10.30 மணிக்கு இடம்பெற்ற இந்நிகழ்வில் இரண்டு லட்சம் ரூபாவுக்கான காசோலையைத் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவஸ்தான நிர்வாகசபைப் பொருளாளர் அ.சண்முகநாதன், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் துணைவேந்தர் கருத்துக் கூறுகையில் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் முன்மாதிரியை ஏனைய ஆலய நிர்வாகிகளும் பொதுமக்களும் பின்பற்ற வேண்டும் என்று தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ நடவடிக்கைக்காக காசோலையை துணைவேந்தர்,யாழ். பல்கலைக்கழக கல்விப்புல உதவிப் பதிவாளர் திருமதி ஜெ.தயானந்தனிடம் வழங்கினார்.

இந்நிகழ்வில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவஸ்தான நிர்வாகசபை இணைச் செயலாளர்களான நா.தவநாதன், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், ஆலய நிர்வாக உத்தியோகத்தர் கா.சிவபாலன், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஒ-12-14)

### நாளை

மார்கழி 23
சனிக்கிழமை
07.01.2006
திதி: அட்டமி
பிற்பகல் : 4.50 வரை
நட்சத்திரம் :ரேவதி
முன்னிரவு : 06.34 வரை
சுபநேரம் : 03.32 - 05.02
ராகுகாலம் : 09.32 - 11.02
(யாழ்ப்பாண நேரப்படி)

### உதயவாக்கு

அன்புள்ள குணம் அலையில்லாத நதியைப் போன்றது.
- ஓர் அறிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

56 - xxxx தொடரிலக்கமுடைய சிங்கில் AC உடைய டொல்பின் வான் விற்பனைக் குண்டு. தொடர்பு: T.P.: 077 6341683. (44953)

45 நாள்கள் நிரம்பிய (டேன்) நாய்க் குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: யோ.ராஜா, 'புஷ்பா வாசா', ம.ம.வி.வீதி, வதிரி, கர வெட்டி. (44964)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில் மூன்றே முக்கால் பரப்புக் காணியில் அமைந்துள்ள 4 அறைகள் கொண்ட வீடு, தனிக்கிணறு பிரயோசனங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 0777 079746. (சி-47197)

## வீடு வாடகைக்கு

32/6, றக்கா வீதியில் புதிய வீடு ஒன்று வாடகைக்குண்டு. தொடர்பு: T.P.: 8095, 6057. (44966)

## தவறிவிட்டது

மோட்டார் சைக்கிள் இலக்கத் தகடு (G.S 3933) சித்தன்கேணிக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். அருள்மயம், பிள்ளையார் கோயிலடி, சித்தன் கேணி. T.P.: 0602213155. (44952)

கண்டி வீதி, சாவகச்சேரி என்னும் முகவரியைச் சேர்ந்த அமுதலிங்கம் நளாயினி என்பவரது தேசிய அ.அட்டை (837021510V) 02.01.2006 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் சமர்ப்பிக்கவும். (சி/47220)

## விற்பனைக்கு

டயறிகள், கலண்டர்கள் (பெரிய, சிறிய) மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். (சி/47222)(32-11-17)

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் முருகேசு தில்லைநாயகம்**

(ஸ்ரீ பரமானந்த ஆச்சிரம நிர்வாக அலுவலர்) அவர்கள் ஆச்சிரம வளர்ச்சிக்கும் சிறார்களின் வாழ்வு சிறக்கவும் அயராது சேவையாற்றி 03.01.2006இல் சிவபதமடைந்தார்.

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி!

தர்மகர்த்தா சபையினர்,
பணியாளர், சிறார், முதியோர்.
ஸ்ரீ பரமானந்த ஆச்சிரமம்,
வதிரி, கரவெட்டி. (சி/47725)(-2432-11-17)

## BARATHY
சித்தன்கேணி

A/L2008

கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
யாழ் நகரின் பிரபல்யமிக்க ஆசிரியர் குழுவினால்

| | |
|---|---|
| பொருளியல் மகேந்திரன் | கணக்கீடு முகுந்தன் |
| வணிகக்கல்வி பசில் | அளவையியல் R.P. சர்மா |
| தமிழ் பாலா | இந்துநாகரிகம் சுரேஸ் |
| இந்துசமயம் தரன் | புவியியல் குமரன் |
| கிறிஸ்தவம் வசந்தன் | அரசியல் சுகாஷ் |
| நாடக.அரங். சுதன் | ஆங்கிலம் நிஷாந்தன் |

உங்கள் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளவும்

**Spoken English**

புதிய பிரிவு செவ். - வியா. 3 p.m. நடைபெறுகின்றன.
Lectured :
By:NISHANTHAN (Dip. in Eng.)
(44961.32.11.17)

## வீடு வாடகைக்கு

வீடு வாடகைக்குண்டு. திருநெல்வேலிச் சந்திக்கு அருகில் நல்ல நிலையில் உள்ள சகல வசதிகளும் உள்ள வீடு வாடகைக்குண்டு.
தொடர்புகளுக்கு:

தியாகராஜா கிளினிக்,
இல.191, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. யாழ்ப்பாணம். T.P.: 021 222 5058.
(44989)(32-11-17)

## STUDY IN SINGAPORE
FTMS

**Under Graduate Degree Programs.**
(Com. Sce., Com. Eng., BIT, BBA, Marketing, Accounting)
Professional Courses: ACCA, CAT

**பயிற்சிக் கட்டணம் - 100 000/- முதல்**

February பிரிவுகளுக்கான அனுமதிகள் பெற்றுக்கொடுக்கப்படும்.
ஆர்வமுள்ளோர் தங்கள் தொடர்பு விவரங்களுடன் 20th January முன்னதாக விண்ணப்பங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**Golden Education Services**
No. 717, K.K.S. Road,
யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 0773256575, 0773164320.
(44937) (24.32.11.17)

## VACANCIES
### UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

Further to our advertisement dated 25/11/2005, the closing date for entertaining application for the following posts has been extended upto 16th January 2006.

**FACULTY OF MEDICINE**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Nursing/Pharmacy/Medical Laboratory Technology

Demonstrator/Tutor (on Contract) in Nursing/Pharmacy

**FACULTY OF ARTS**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Geographical information System

**FACULTY OF AGRICULTURE**

Instructor in Computer Technology (on contract)

**Registrar**
University of Jaffna
04.01.2006
(C/47229)(21)

## கண்ணீர் அஞ்சலி

அச்சுவேலியில் இறைபதம் எய்திய
எமது பாடசாலை ஆசிரியை சுகந்தினியின்
தந்தையின் பிரிவால் வாடும் அன்னாரின் குடும்பத்தின்
துயரில் நாமும் கலந்துகொள்வதுடன், அவரின்
ஆத்மசாந்தியின் பொருட்டு
இறையருள் வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
மு/புதுக்குடியிருப்பு றோ.க.வி.
(சி/47230)(32-19-45)

## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம்:- **21-01-2006 சனிக்கிழமை**
நேரம்:- **மு.ப.11 மணிக்கு**
இடம்:- **சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி**
தலைமை:- **மன்றத் தலைவர் வி.மகாலிங்கம்**

**நிகழ்ச்சி நிரல்**

01. இறைவணக்கம்
02. வரவேற்புரை
03. தலைமையுரை
04. சென்றாண்டறிக்கை
05. செயற்பாட்டறிக்கை
06. கணக்கறிக்கை
07. சிறப்பு விருந்தினர்கள் உரை
08. புலமைப்பரிசில் நிதியம் வழங்கல் (அமரர் ப.நமசிவாயம் நினைவாக)
09. விதவை நிதியம் வழங்கல் (அமரர் கு.தவராஜசிங்கம் நினைவாக)
10. நடப்பு வருடத்துக்கான புதிய நிர்வாகத் தெரிவு (2006)
11. மதிய போசனம்
12. நன்றியுரை

மன்றின் விடயமாக பிரேரணைகள் இருந்தால் 13.01.2006 ஆம் திகதிக்கு முன் எழுத்துமூலம் மன்றச் செயலாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்கவும்.

மேற்படி கூட்டத்திற்கு அனைத்து வணிகர் மன்ற அங்கத்தவர்களையும் தவறாது கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இல.13, 14,
தனங்கிளப்பு வீதி,
சாவகச்சேரி.

ப.பாலேந்திரா,
செயலாளர்,
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

## பொருளியற் கல்லூரி

பெருமாள் கோயில் அருகில் நாவலர் றோட், யாழ்ப்பாணம். - இணுவில் மத்திய கல்லூரி அருகில் கே.கே.எஸ். றோட், இணுவில்.

A/L 2008

(இரு இடங்களிலும்)
**கலை - வர்த்தகப் பிரிவுகள்**
புதிய வகுப்புகள் ஆரம்பம் - 07.01.2006 சனி
**நீங்கள் நன்கு அறிந்த பிரபல்யமிக்க ஆசிரியர் குழுவினால்**

| A/L 2008 | யாழ்நகரில் | இணுவிலில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | மகேந்திரன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| அளவையியல் | R.P. சர்மா | R.P.சர்மா |
| புவியியல் | குமரன் | குமரன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| வரலாறு | பத்மன் | பத்மன் |
| நாட. அரங்கியல் | சுகந்தன் | சுதன் |
| அரசியல் | றஜீவன் | சுகாஷ் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
யாழ்நகரில் - வர்த்தகப் பிரிவு - 8 a.m.- கலைப்பிரிவு.9 a.m
இணுவிலில் -வர்த்தகப் பிரிவு - 3p.m - கலைப்பிரிவு 8 a.m
**Note: A/L** 2006, 2007 பிரிவு I, பிரிவு II அனைத்தும் வழமை போல் சனிக்கிழமை நடைபெறும். (44960)(18.32.19.45)

## நேர மாற்றம்

நோயாளர்களுக்கு ஏற்படும் போக்குவரத்துக் கஷ்டங்களைக் கவனத்தில் கொண்டு தற்காலிகமாக சன்றைஸ் மெடிக் கிளினிக்கில் வைத்திய நிபுணர்களின் ஆலோசனை சேவை நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகும் என அறியத்தருகின்றோம்.

**சன்றைஸ் மெடிக் கிளினிக்**
(பஸ் நிலைய வைரவர் கோயில் முன்பாக),
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 6069.
(44958)(32-19-45)

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியர் **திரு.சி.சுகுமாரன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தியாகராசா தில்லைநாயகி**

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தவருக்கு தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,
வல்வெட்டித்துறை.
(44967)(32-19-45)

## ஓராண்டு நினைவு அலைகள்

தோற்றம் 17 - 07 - 1920



மறைவு 16 - 01 - 2005

அமரர் ஜோதிட மாமணி வைரவன் சின்னத்தம்பி
அவர்களின் நினைவு கூறல்

எம் குல தெய்வமே! புகழோனே! பெரியோனே!
உம் பிரிவு எம்மை வதைக்குதே!
ஓராண்டு மறைந்தாலும் உங்கள் புகழ்
படர்ந்துள்ளதே!
என்றென்றும் உங்களை நினைவில் நிறுத்தி
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

துரை வீதி,
இணுவில் தெற்கு. (44985)(32-15-19)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி யோசேப்பு றோசம்மா



சிறுவிளான், இளவாலையைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப்பு றோசம்மா அவர்கள் 01.01.2006 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் நல்லடக்கத், திருப்பலி பாண்டியன்தாழ்வு, புனித அன்னாள் ஆலயத்தில் நாளை (07.01.2006) சனிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்படும். அதன் பின் அன்னாரின் புகழுடல் புனித யுவானியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17/5, அன்னாள் ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (44988)(32-19-45)

தகவல்:
அருட்பணி
J.J. மைவுலிஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில்களில் சிறப்புப் பெறும் சிதம்பரமும் விரத மகிமை சொல்லும் திருவெம்பாவையும்

பூவுலகில் சிறியனவும் பெரியனவுமாகக் கோடானுகோடி சிவத்தலங்கள் உள்ளன. ஆயினும் நாயன்மார்களின் தேவாரத்திருப்பதிகங்கள் பாடப் பெற்றவை 274 திருத்தலங்களே. இவற்றுக்குச் சிறப்பு அதிகம்.

இவற்றுள்ளும் திருவாரூர், காஞ்சி ஆகிய



சிதம்பர ஆலயத்தின் முகப்புத் தோற்றம்

பிருதுவிலிங்கத் தலங்களும், திருவானைக்காவில் அப்புலிங்கத்தலமும், திருவண்ணாமலையில் தேயுலிங்கத்தலமும், திருக்காளத்திவாயுலிங்கத்தலமும், சிதம்பர- ஆகாயலிங்கத்தலமும் ஆகிய பஞ்சபூத ஸ்தலங்கள் மகிமை மிக்கன. இவைகளுள்ளும் மகாமகிமை பொருந்தியது சிதம்பரம்.

பஞ்சபூதங்களுள் வெளியாகிய ஆகாயமொன்றே சிறிதும் குற்றமில்லாதது. அது போன்றே ஆகாயத்தலமாகிய சிதம்பரமும் குறைவிலா நிறைவானது.

நமது சமயத்திற்கு ஆதாரமான வேத, சிவாகமங்களும், திருமுறைகளும், ஆணையிட்டுக் கூறும் செம்பொருள் நடராஜப் பெருமானே! வேத, சிவாகம மந்திராதிகளின் முதலிலும், முடிவிலும் கூறப்படும் ஓம் எனும் பிரணவ மந்திரம் நடராஜப் பெருமானது கூத்தின் வடிவமே!

திருமுறைகளையும் புராணங்களையும் ஓதுமுன்பும் நிறைவிலும் கூறப்படும் 'திருச்சிற்றம்பலம்' எனும் மந்திரமும் சிதம்பரமே.

திருமுறைகள் கண்டெடுக்கப்பட்ட ஸ்தானமும் சிதம்பரமே! திருமுறையாசிரியர்கள் யாவராலும் பாடப்பெற்றதலமும் சிதம்பரமே! திருவாசகத்தைக் கூத்தப்பிரானே வேதியராகிவந்து எழுதியருளியதும், திருக்கோவை பாடப்பணித்து அருளியதும் போன்ற திருவிளையாடல்களை மணிவாசகர் மாட்டு இறை நிகழ்த்தியதும் சிதம்பரத்திலேயே!

சேக்கிழார் சுவாமிகள் அடியார் வரலாற்றைப் பாடமுனைந்தபோது ''உலகெலாம்'' என்று அடியெடுத்துக் கொடுக்கப்பெற்றதும் சிதம்பரக் கூத்தன் முன்னிலையிலேயே.

### சிதம்பரமே கோயில்!

'கோயில்' என்று உலகிலுள்ள ஆலயங்களையெல்லாம் உபசாரமாகக் கூறப்படுவது உண்டு. ஆயினும் ''கோயில்'' எனும் சிறப்புப் பெயர் சிதம்பரத்துக்கே உரியதாம். திருவாசகத்திலேயே சிதம்பரம் பற்றிய பதிகங்களிரண்டின் பெயர்கள் கோயிற்திருப்பதிகம், கோயில் மூத்த திருப்பதிகம் என்பனவாக இருத்தலும், உமாபதி சிவாச்சாரியார் பாடிய சிதம்பரத்தலபுராணம் ''கோயிற் புராணம்'' என்றே வழங்கி வருதலும் ''சிதம்பரமே கோயில்'' என்பதை விளக்கும்.

மனிதவுடலின் நெஞ்சுப் பகுதியில் இருதயம் விளங்குகிறது. இருதயத்துடிப்பு உள்ள மட்டுமே மனித இயக்கமும் இருக்கும். இவ்வாறே பூலோகத்தின் இருதயமாகச் சிதம்பரம் திகழ்கிறது. சிதம்பரத்தில் நடராஜரின் திருக்கூத்து இடையறாமல் நடந்துவருவதாலேயே உலகம் தொடராக இயங்கிவருகிறது.

உலகிலுள்ள ஏனைய சிவாலயங்களிலுள்ள நடராஜமூர்த்தங்கள் யாவும் தடத்த நிலையிலடங்கும். உருவமூர்த்தங்கள் இருபத்தைந்தினுள் முதலாவதாய நிருத்த மூர்த்தமேயாம். சிதம்பர நடராஜமூர்த்தி 'தடத்தங் கடந்த பேரொளிப் பிழம்பாய சொரூப சிவமே' என்று புராணங்கள் கூறும்.

### ஆறுகாலப் பூசை

கோயில்களில் விதிப்படி ஆறுகாலப் பூசைகள் நடைபெறுவதுண்டு. நடராஜப் பெருமானுக்கு வருடந்தோறும் ஆறு அபிஷேகங்கள் நடைபெறுவதுண்டு. மனிதர்களின் ஒருவருஷம் தேவர்களுக்கு ஒருநாள் என்ற கணக்கில் தேவர்கள் நடராஜப் பெருமானைப் பூசிக்குங் காலங்களே அந்த ஆறுஅபிஷேக காலங்களுமாம்.

ஞானக்கதிர்

மார்கழித் திருவாதிரை அதிகாலைப் பூசையாகவும், மாசிமாதத்துப் பூர்வ சதுர்த்தசி காலைப் பூசையாகவும், சித்திரை மாதத்துத் திருவோணம் உச்சிப்பூசையாகவும், ஆனிஉத்தரம் மாலைப் பூசையாகவும், ஆவணிப் பூர்வ சதுர்த்தசி சாமப் பூசையாகவும், புரட்டாதிப் பூர்வ சதுர்த்தசி அர்த்த சாமப் பூசையாகவும் கொள்ளப்படுகின்றன.

சிதம்பரத்தில் ஆண்டில் இருதடவை மகா உற்சவம் நடைபெறும். உத்தராயன இறுதி மாதமாகிய ஆனி மாதத்து உத்தர நட்சத்திரத்தை இறுதியாகக் கொண்ட பத்துநாள் உற்சவம் ஒன்று. இது பகல் திருவிழா போன்றது. மற்றையது தக்ஷிணாயன இறுதி மாதமாகிய மார்கழி மாதத்துத் திருவாதிரை நட்சத்திரத்தை இறுதியாகக்கொண்ட பத்துநாள் உற்சவம். இது இராக் காலத் திருவிழா போல்வது.

இரண்டிலும் மகா விசேடமானது மார்கழித் திருவிழாவே! அரி, பிரம்ம, இந்திராதி தேவர்கள் யாவரும் வேற்றுருவந்தாங்கி வந்து ஆதிரை திருவிழாக் காண்பர்.

*ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்*
*அணியுடை ஆதிரை நாள்*
*நாராயணனொடு நான்முகன்*
*அங்கி இரவியும் இந்திரனும்*
*தேரார் வீதியில் தேவர் குழாங்கள்*
*திசையனைத்தும் நிறைந்து*
*பாரார் தொல் புகழ்*
*பாடியும் ஆடியும்*
*பல்லாண்டு கூறுதுமே*

எனும் திருப்பல்லாண்டு தெரிவிக்கும் உண்மை இதுவே.

### திருவெம்பாவை

சைவ சமயிகளின் கோயிலில் நடைபெறும் மகோற்சவ காலமே மார்கழித் திருவாதிரையை ஈறாகவுடைய திருவெம்பாவைப் பத்துத் தினங்களும் சைவ சமயிகள் இப்பத்துநாள்களிலும் விரதம், விழா, பூஜனை, பாதயாத்திரை, புராணபடனம், வழிபாடு என்று நியமம் பூண்டு ஒழுகுவதும் இதனாலேதான்

மூலக் கோயிலின் விழா - மேலிடத்துக் கொண்டாட்டம் எங்கும், எவர்க்கும், எவ்விடத்தும் ஆதலில் வியப்பில்லை. கல் வைத்த கோயில்களிலிருந்து கோபுரமாடங்களோடு கூடிய கோயில்கள் வரை எங்கும் வேறுபாடில்லாது இவ்விசேடம் அனுஷ்டிக்கப்படுவது வழமை. இதில் மூர்த்திபேதங் கிடையாது.

சிவாகமப் பூசைமுறையிலே அர்த்தசாமப் பூசை முடிந்தவுடன் கோயிலைப் பூட்டிவிடுவார்கள். பூவுலகிலுள்ள சகல கோயில்களிலும் விளங்குகின்ற தெய்வசாந்தித்தியம் அத்தனையும் அர்த்தசாமத்தில் சிதம்பரத்திலே போய் ஒடுங்குவதாகவும், மீள அங்கிருந்தே அவை வியாபிப்பதாகவும் ஆகமங்கள் அறுதியிட்டுக் கூறுகின்றன. (இக்காரணம் பற்றியே நள்ளிரவிற் கோயிற்கதவைத் திறப்பதில்லை).

இஃதொன்றே சிதம்பரமே நம் மூலாலயம் என்பதை விளக்கப்போதுமானது.

### சிதம்பரத் தேர்

இச்சிதம்பரத்தலத்துத் திருவாதிரைத் தேரோட்டம் மிகச் சிறப்பானது. சேந்தனார் சுவாமிகள் பல்லாண்டு பாடித் தேரோடவைத்த அற்புதமே பேரற்புதம். சேந்தனார் பரம ஏழை. வயல்களிற் பொறுக்கிச் சேர்த்த தானியங்களிற் களி சமைத்து நடராஜருக்கு நிவேதித்த பின் தாமுண்பவர்.

இவரது பக்தித் திறத்தை உலகுக்கு வெளிப்படுத்த அம்பலவன் நிகழ்த்திய திருவிளையாடலே பல்லாண்டு பாடிடத் தேரோட வைத்தமையாகும்.

இன்று ஆலயங்களில் திருவாதிரை நாளிலே 'களி' நிவேதனம் சிறப்பாக இடம் பெறுகின்றது. இஃது சேந்தனார் வரலாற்றோடு ஒட்டியதாம்.

திருவெம்பாவை விரத நாள்களிலே மணிவாசக சுவாமிகளுக்கு விழா எடுப்பதும் சிறப்பம்சம். அம்பலவனே 'பாவை பாடிய வாயாலே கோவையும் பாடுக' என மணிவாசக சுவாமிகளைப் பணித்த விடத்து திருவாசகத்து 51 பனுவல்களுள்ளே திருவெம்பாவை



யைச் சிறப்பித்துக் கூறின.

இதனால், திருவெம்பாவை நாள்களிலே ஏனைய திருமுறைகளுக்கெல்லாம் காப்பிட்டு வைத்தலும், திருவாசகத்திலும் திருவெம்பாவைப் பாடல்களையே பூசை, வழிபாடுகளில் விண்ணப்பம் செய்தலும் முறையாக வழங்கி வருகிறது.

திருவாதிரை நாளன்று சுவாமி உற்சவமான பின் திருமுறைச் சுவடிகளுக்கு விசேட பூசை நிகழ்த்திக் காப்பினை நீக்கித் திரும்பப் பன்னிரு திருமுறைப் பாராயணஞ் செய்யத் தொடங்குவர்.

இந்நியமங்களோடு திருவெம்பாவைப் பத்துத் தினங்களிலும் மணிவாசக சுவாமிகள் திருக்கதையாகிய திருவாதவூரடிகள் புராணம் படித்துப் பொருள் விரித்தலும் முக்கியமானதாம்.

இவ்வாண்டு நம் சைவ மூலக்கோயிலாய சிதம்பரத்தலத்தின் மகோற்சவம் 2006.01.04 இல் ஆரம்பமாகி 2006.01.13 இல் நிறைவாகவுள்ளது. இப்பத்துத் தினங்களே திருவெம்பாவை எனும் பெயருக்குரியன. சைவ ஞானமாகிய விழிப்பிலேகளிக்கும் பக்குவிகள் அஃதில்லாது உலகியலிருளில் அழுந்தி உறங்கியுள்ளவர்களைத் துயில் எழுப்பும் பாவனையோடு கூடிய தினங்கள் இப்பத்துத் தினங்களுமே என் பதில் யாதொரு சந்தேகத்திற்கும் இடமில்லையே! ✱

சைவப்புலவர் ஏ.அனுசாந்தன்

# 2006இல் உங்கள் இராசி எப்படி?

## துலாம்

சித்திரை 3, 4, சுவாதி, விசாகம் 1, 2, 3

*தர்மம் தலைகாக்கும் என்கிற நம்பிக்கையுடன் அறச்செயல்களில் ஈடுபட்டு வரும் துலாம் ராசி அன்பர்களே!*

புத்தாண்டில் உங்களின் செயல்திட்டங்களை நிறைவேற்ற ஒருங்கிணைந்த மனதுடன் கூடுதல் முயற்சி செய்வீர்கள். வீடு, மனை வாகன வகையில் தேவையான அபிவிருத்திப் பணிகளைப் பொருளாதார நிலை அறிந்து செயல்படுத்துவதால் நன்மை உண்டாகும். தாயின் உடல் நலத்தில் தகுந்த கவனம் வேண்டும். சிலருக்கு புதிய கல்வி பயிலும் வாய்ப்பு கைகூடும். புத்திரர்கள் உங்களின் சொல்லுக்கு கூடுதல் மதிப்புத் தந்து தங்கள் செயல்களைத் தொடங்குவார்கள். அவர்களின் புத்தி சாலித்தனமான காரியங்கள் உறவினர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெறும். போட்டி, பந்தயங்கள் போன்றவற்றில் வெற்றியும் பெறுவார்கள். பூர்வ புண்ணிய சொத்துக்களைத் தகுந்த முறையில் தக்க வைத்துக் கொள்ளுங்கள். புதிய சொத்து வாங்குவதற்கான நன்னிலை தரும் சுப பலன்கள் நடக்கும்.

கடன், வழக்கு, விவகாரம் போன்ற வற்றில் தொந்தரவு இருந்தால் படிப்படியாகக் குறைந்து விடும். கணவன், மனைவி ஒற்றுமை நல்ல முறையில் இருக்கும். தொழில், வியாபாரம் சார்ந்த வகையில் புதிய வாய்ப்புகளும், அதிர்ஷ்டம் தரும் வகையிலான பண வரவுகளும் கிடைத்து மனமகிழ்வு பெறுவீர்கள். மூத்த சகோதரர்கள் தங்களின் முன்னேற்ற செயல்பாடுகளுக்காக உங்களின் உதவியைக் கேட்டுப் பெறுவார்கள். ஆ[illegible]யம் தரும் வகையிலான பண வரவுகளைத் தகுந்த முறையில் செலவழிப்பதால் மட்டுமே மற்றவரின் விமர்சனத்திற்கு ஆளாகாத தன்மை உண்டாகும். வெளியூர் பயணத்தால் நன்மை உண்டு. ஆன்மிக அருள் பெற்றவரின் புதிய வழி காட்டுதல் உங்களின் வெளியூர் பயண நிகழ்வில் உண்டாகும். வெளிநாட்டு வேலைவாய்ப்பு முயற்சிகளில் ஈடுபட்டு உள்ளவர்களுக்கு நன்மை தரும் விதமான பலன் ஏற்படும்.

**தொழிலதிபர்கள்:** அரிசி ஆலை, உப்பளம், துணிவகை ஆகிய தொழில்கள் வளர்ச்சியும் பணவரவும் பெறும். ஆழ்குழாய் கிணறுகளில் நீர் இறைக்கும் இயந்திரங்களை உற்பத்தி செய்பவர்கள், தண்ணீர் தொட்டிகள், மீன் பண்ணை, வாசனைத் தைலங்கள், கண் கண்ணாடிகள், மழை சாதனங்கள் சம்பந்தப்பட்டோர் தொழில் வளர்ச்சி பெற்றுக் கூடுதல் பண வரவுகளால் குடும்பத்தின் வசதியை உயர்த்துவார்கள். நிதி நிறுவனம், கல்வி நிறுவனங்கள், வாகனத் தயாரிப்பாளர்கள், கணனி சாதனங்கள், தங்கும் விடுதிகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஆகிய தொழில் செய் பவர்கள் கூடுதல் வாய்ப்புகளைப் பெற்று நல்ல முன்னேற்றம் பெறுவார்கள். பணத் தேவைகள் தடங்கலின்றி வந்து சேரும்.

**வியாபாரிகள்:** குளிர்பானம், மசாலா பொடிகள், சமையல் எண்ணெய், தேன் மற்றும் நெய், இறைச்சி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் அபரிமிதமான வளர்ச்சி பெற்று நற்பலன்கள் பெறுவார்கள். மோட்டார் வாகனம், கட்டடப் பொருள்கள், தண்ணீர் தொட்டிகள், மீன்பிடிக் கருவிகள், மீன், கடல் சார்ந்த பொருள்கள் விற்பனை செய்வோர் கூடுதலான விற்பனை காண்பதால் பணவரவு அதிகரிக்கும். பாத்திரங்கள், பலசரக்கு, மின்னியல், ரப்பர் பொருள்கள், பூட்டு, கடிகாரம், எழுது பொருள் வியாபாரம் செய்பவர்கள் மிகுந்த ஆர்வமுடன் செயல்படுவதால் அதிக விற்பனையும் கூடுதல் பணவரவும் கிடைக்கப் பெறுவார்கள். பலசரக்கு வியாபாரிகளின் வாழ்க்கைத்தரம் மளமளவென உயரும். வாழ்க்கையில் புதிய நம்பிக்கை பிறக்கும். வீடு, மனை போன்றவற்றில் தகுதிக்கு உட்பட்ட திருத்தப் பணிகளைச் செய்யலாம். புத்திரர்களின் யோகபலம் துணை நிற்கும். பிறரிடம் வாக்குவாதம் செய்வதைத் தவிர்ப்பதால் நன்மை உண்டு.

**பணியாளர்கள்:** அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள், கூடுதல் பொறுப்புடன் செயல்பட்டு நிர்வாகத்தின் வளர்ச்சிக்கும் தனது உயர்வுக்கும் பாடுபடுவார்கள். சக ஊழியர்கள் உங்களின் செயல்திறமை கண்டு வியப்படைவார்கள். நிர்வாகத்திடம் முன்பு எதிர்பார்த்த சலுகைகளை இது காலம் அனுகூலமாய் பெறுவதற்கு வழி பிறக்கும். கூட்டுத்தொழில் புரிபவர்கள் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் செயல்படுவதால் மட்டுமே அமைதியான தொழில்நிலை காண முடியும்.

சுயதொழில் புரிபவர்க[illegible] தங்களின் உழைப்பையும் திறமையையும் கூடுதலாகப் பயன்படுத்தி மனதில் திட்டமிட்ட இலக்கை அடைவார்கள். தனது தொழில் வகை சாராத நண்பர்களால் தேவையான உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். பொருளாதார நிலைமை வளம் நிறைந்த தன்மையில் இருக்கும். ஞானம் நிறைந்த சாதுக்களின் வழிகாட்டலால் வளர்ச்சித் திட்டங்களை வளமுடன் செயற்படுத்துவீர்கள்.

**பெண்கள்:** அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரியும் பெண்கள் தங்கள் பணியில் எதிர்வரும் சிரமங்களை மனத்துணிவுடன் எதி[illegible]கொண்டு சாதகமான நிலைக்கு மாறி விடுவர். பணியின் இலக்கை படிப்படியாக நிறைவேற்றுவதால் நற்பெயர் பெறுவீர்கள். பணியில் திறமைகளை வளர்த்துக் கொள்ள உருவாக்கப்படும் பயிற்[illegible]யிலும் தேர்ச்சி பெறுவீர்கள். சுயதொழில் புரியும் பெண்கள் தங்கள் தொழில் சாராத நண்பர்களின் வெளிவட்டார தொடர்பு மூலம் கிடைத்த உதவியால் புதிய வாய்ப்புகளைப் பெறுவர். கூட்டுத் தொழில் செய்பவர்கள் அபிவிருத்திப் பணிகளுக்காக சொந்தப் பணத்தை மூலதனமாக்குவதைவிட நிதி நிறுவன உதவி பெறுவது நன்மையைத் தரும். குடும்ப நிர்வாகம் கவனிக்கும் பெண்கள், வாழ்க்கை வசதிகளும், ஆபரண சேர்க்கையும் பெறுவார்கள். திருமண எதிர்பார்ப்பு உள்ள பெண்களுக்கு முயற்சிகள் நல்ல பலனைத் தரும். புத்திரப்பேறு விரும்புபவர்களுக்கு கிரக நல்லருளால் நன்மை உண்டாகும்.

**மாணவர்கள்:** தொழிற்சாலை இயந்திரங்கள், கொதிகலன், வாகன வடிவமைத்தல் மற்றும் இயக்குதல், அழகுக்கலை, இசை, ஒளியப்பயிற்சி மாணவர்கள் தகுந்த கவனத்துடன் செயற்படுவதால் மட்டுமே கூடுதல் திறமைகளை வளர்க்க முடியும். விவசாயம், நீர்வளம், கடல் சார்ந்த உயிரின ஆராய்ச்சி, வான்வெளி ஆராய்ச்சி பயிற்சி மாணவர்கள் ஆசிரியரின் தனிக் கவனத்தைப் பெற்று சிறந்த மாணவராக உருவெடுப்பார்கள். பயிற்சிக்குத் தேவையான பணத்தேவை தடையில்லாத வகையில் கிடைக்கும். சகமாணவர்கள் படிப்பில் ஒருவருக் கொருவர் சிறந்து விளங்க வேண்டும் என்கிற சிந்தனையுடன் நடந்து கொள்வார்கள். விளையாட்டுகளில் கவனமுடன் ஈடுபடுவது நல்லது. தந்தை, மகன் உறவு நிலை அன்பும் நட்பும் கலந்த தன்மையில் இருக்கும். சுற்றுலா வாய்ப்புகளில் கலந்துகொள்பவர்கள் தகுந்த பாதுகாப்பு முறைகளைக் கடைபிடிப்பதால் மட்டுமே சிரமங்களைத் தவிர்க்கலாம்.

(ஏனைய இராசிகளுக்கான பலன்கள் [illegible]ந்து வெளிவரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியோர மரங்கள் தறிப்பு சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.6

வீதியோரங்களில் இருக்கும் நிழல் மரங்கள், வீட்டுவளவு மற்றும் பயன்தரு மரங்கள் ஆகியவை படையினரின் வற்புறுத்தலின் பேரில் வெட்டப்பட்டு வருகின்றன.

அண்மைக் காலத்தில் வீதியோரத்தில் கிளைமோர் வெடிப்பதாகக் கூறியே இராணுவத்தினர் பொதுமக்களின் வீடுகளுக்குச் சென்று மரங்களைத் தறிக்கும்படி கட்டளையிடுகின்றனர்.

வீதியோரங்களில் நிழலுக்கு நடப்பட்ட மரங்கள், வேலிக் கதிகால்கள் மற்றும் பயன்தரு மரங்கள் என அனைத்து மரங்களும் குறுக்காக வெட்டப்பட்டு மொட்டை மரங்களாகக் காணப்படுகின்றன.

யாழ்.குடாநாட்டில் ஏற்கனவே யுத்த அனர்த்தங்களால் ஆயிரக்கணக்கான பனை, தென்னைகள் உட்பட பல மரங்களும் அழிக்கப்பட்டு இருந்தன.

மீண்டும் நடப்பட்ட மரங்கள் தற்போது அழிக்கப்படத் தொடங்கியுள்ளமையால் சுற்றுச்சூழல் மோசமான முறையில் பாதிக்கப்படக் கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளதாகச் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறுகின்றார்கள்.

சுற்றுச்சூழல் அமைச்சின் ஊழியர்கள் யாழ்.குடாநாட்டில் இடம்பெறும் இத்தகைய அவலமான நடவடிக்கையை இட்டு எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள முன்வரவில்லையென பொது அமைப்புக்கள் கண்டனம் தெரிவிக்கின்றன. (ஒ-68)

# அடைவு மட்டக் கல்வி மேம்பாட்டுக்கு தென்மராட்சி வலயம் நடவடிக்கை

தென்மராட்சி;ஜன.6

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இவ்வருடம் தரம் பத்து வகுப்புகளில் கற்கும் மாணவர்களின் அடைவு மட்டக் கல்வியினை மேம்படுத்த வலயக் கல்விப் பணிப்பாளர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

கடந்த வருடம் நடத்தப்பட்ட தரம் 9 மாணவர்களுக்கான மாகாண மட்டப் பொதுப் பரீட்சையில் மாணவர்கள் பெற்ற புள்ளிகளைக் கருத்திற்கொண்டு இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாகாண மட்டப் பரீட்சையின் பகுப்பாய்வின்படி வலயப் பாடசாலைகளைச்சேர்ந்த மாணவர்கள் கணித பாடத்தில் 23.8 சத வீதத்தினர் மட்டுமே சித்தியடைந்துள்ளனர்.

இப்பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் மாணவர்கள் பெற்ற புள்ளிகளைக் கருத்திற்கொண்டு அடைவு மட்ட பாடங்களில் அக்கறை செலுத்தி கல்வியினை மேம்படுத்தப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார்.

(ஒ-117)

# உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மாற்றம்

யாழ்ப்பாணம்,ஜன.6

யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராக திருமதி ம.வசந்தகுமார் கடந்த இரண்டாம் திகதி தொடக்கம் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவை வகுப்பு II தரம் II இல் உள்ள திருமதி ம.வசந்தகுமார் முன்னர் யாழ்.மாநகரசபையின் செயலாளராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இதுவரைகாலமும் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராகக் கடமையாற்றிய க.இராசையா -

யாழ்.மாவட்ட ''சுனாமி'' பிரிவிற்கான உள்ளூராட்சி உதவி ஆணையாளராகப் பணியாற்றவுள்ளார் என்று தெரியவருகின்றது. (ஒ)

# மானிப்பாய் பிரதேச சபைக்கென கட்டடம் அமைக்க ரூ.2 கோடி நிதி

யாழ்ப்பாணம்,ஜன.6

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை தலைமை அலுவலகத்துக்கான கட்டடம் அமைக்க இரண்டு கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபைச் செயலாளர் மே.சாந்தசீலனுக்கு இந்த நிதி ஒதுக்கீடு குறித்து அறிவித்துள்ளார்.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசபை திட்டமிடற்பிரிவுப் பொறுப்பதிகாரியால் தயாரிக்கப்பட்டு யாழ்.அரச அதிபர் ஊடாக செயலாளர் எஸ்.ரங்கராஜாவுக்கு முன்மொழிவுத் திட்டம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்தே தற்போது கட்டடத்துக்கென நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. புதிய இரண்டு மாடிக் கட்டடம் அமைப்பதற்கான நிதி 'நீர்ப்' திட்டம் ஊடாகவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புதிய இரண்டு மாடிக் கட்டடத் தொகுதி மானிப்பாய் பட்டின நூலகத்திற்கு அருகில் அமைக்கப்படவுள்ளது.

வலி.தென்மேற்கு திட்டமிடற்பிரிவு சிரேஷ்ட தொழில்நுட்ப அலுவலர் வே.கணேஷ் தலைமையிலான குழு கட்டடம் அமையவுள்ள பகுதியில் மதிப்பீட்டு வேலை களை மேற்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

மேலும் 'நீர்ப்' திட்டம் ஊடாக மானிப்பாய் நகரப் பகுதியில் இரண்டு மாடிகளைக் கொண்டதாக நவீன சந்தைக் கட்டடம் அமைப்பதற்கும் திட்ட முன்மொழிவு அரசாங்க அதிபரினால் சிபார்சு செய்யப்பட்டு திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-185)

## கரையோரக் காவலரண்களை பலப்படுத்தும் பணி

யாழ்ப்பாணம்,ஜன.6

தற்போது நிலவும் பதற்றமான சூழ்நிலையை அடுத்து குருநகர் மற்றும் பாசையூர் கரையோரப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள படையினர் காவல் அரண்களைப் பலப்படுத்தி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. (ஒ-190)



அளவையூர் அழகனின் 'நீர்க் கோலங்கள்' இறுவட்டு வெளியீட்டு விழா அண்மையில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் வெளியீட்டுரையை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் நிகழ்த்துவதையும் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபர் க.சிவாஜி, சிவஸ்ரீ பரமேஸ்வர ஜெயக்குமாரக் குருக்கள் மற்றும் இறுவட்டின் ஆசிரியர் வடிவழகன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (ஒ-13)

# மின்சார விஸ்தரிப்பு வேலைகள் நெடுந்தீவு மேற்கில் ஆரம்பம்

நல்லூர்,ஜன.6

நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கான மின்சார விஸ்தரிப்பு வேலைகளை இலங்கை மின்சார சபையின் யாழ்.அலுவலகம் நேற்றுமுன் தினம் ஆரம்பித்துள்ளது.

ஏற்கனவே இப்பகுதிக்கான மின்கம்பங்கள் நடப்பட்டுள்ள நிலையில் தற்சமயம் மின் இணைப்புக்கான உபகரணங்கள் அனைத்தும் எடுத்து வரப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலும் எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் 5 கிலோமீற்றர் வரையான இந்த இணைப்பு வேலைகள் பூர்த்தியடைந்து விடும் எனவும் -

போரினால் பாதிக்கப்பட்டோர் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் இதற்கென 32 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் புங்குடுதீவுக்கான மின்விநியோகத் திட்டத்திற்கு மேற்படி திட்டத்தின் கீழ் ரூபா 40 லட்சம் வழங்கப்பட்டுள்ளதெனவும் யாழ்ப்பாணமின் அத்தியட்சகர் தெரிவித்தார். (த-111)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு குளிரூட்டிகள்

தென்மராட்சி,ஜன.6

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு இரண்டு குளிரூட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனை உத்தியோகத்தர்களால் இந்தக் குளிரூட்டிகள் கடந்த 2 ஆம் திகதி கையளிக்கப்பட்டன. (ஒ-117)

**குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்**

# சில்லாலையில் பொதுமண்டபம்

வலி.தென்மேற்கு,ஜன.6

நியாப் II திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சில்லாலை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் பொதுமண்டபம் நிறுவுவதற்கு நலன் விரும்பி ஒருவரினால் 2 பரப்புக் காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. சில்லாலை தெற்கைச் சேர்ந்த திருமதி சிவசுப்பிரமணியம் கண்மணி என்பவரே தமது மகளின் ஞாபகார்த்தமாக இக்காணியை நன்கொடையாக வழங்கியுள்ளார். சுமார் ஒன்பது லட்சம் ரூபா செலவில் பொதுமக்களின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்படவிருக்கும் இப் பொது மண்டபத்திற்கான கட்டடத்திற்கு அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. சில்லாலை தெற்கு கிராம அலுவலர் க.சுதர்சன் அடிக்கல் நட்டார். நியாப் திட்ட யாழ். மாவட்ட இணைப்பாளர் மற்றும் இப்பகுதி பொதுநிறுவனங்களின் பிரதிநிதிகளும் பொது மக்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, நியாப் II திட்டத்தின் கீழ் இப்பிரிவில் ஆறு வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. இதில் எந்த வீதியை முதலில் புனரமைப்புச் செய்வது என்று இப் பகுதி மக்களுடன் கலந்துரையாடி தீர்மானிக்கப்படவுள்ளதாக சில்லாலை தெற்கு கிராம அலுவலர் க.சுதர்சன் தெரிவித்தார்.

(ஒ-135)



வடமராட்சி யன்ஸ் கழகம் பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடத்திய இலவச மருத்துவ முகாமில் மருத்துவர்கள் நோயாளர்களைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். லயன்ஸ் கழகத் தலைவர் லயன் வி.சிவகுமாரன், செயலாளர் ஏ.துரைசிங்கம் உட்பட லயன்ஸ் கழக உறுப்பினர்களும் படத்தில் உள்ளனர்.

*(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*

# நோயாளர் அனுமதிக்கு புதிய படிவம் மாவட்ட வைத்தியசாலையில் அறிமுகம்

தென்மராட்சி,ஜன.6

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் மருத்துவமனைகளில் நோயாளர்களை அனுமதிப்பதற்கு கடந்த முதலாம் திகதி தொடக்கம் புதிய படிவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

விடுதிகளில் அனுமதிக்கும் போது சிறுவர்கள், பிரசவ தாய்மார், முறிவு, விபத்து, பொதுவைத்தியம் என்ற பிரிவுகளுக்கேற்ப வெவ்வெறு நிறங்களினாலான படிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இதன்படி, மருத்துவ உத்தியோகத்தர்களால் இந்தப் படிவங்கள் நிரப்பப்பட்டு நோயாளி விடுதிகளுக்கு அனுப்பப்படுவர். விடுதியில் கடமையாற்றும் மருத்துவத் தாதியர் வேறு சிகிச்சை படிவத்தில் விவரங்களைப் பதிவுசெய்வார்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# மீன்பிடிக்கக் கடற்படையினர் தடை: கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு

வலி.தென்மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மாதகல், மாரீசன் கூடல், போயிட்டி ஆகிய கடற்பகுதிகளில் கடற்றொழில் செய்வதற்கு கடற்படையினர் விதித்துள்ள தடை குறித்து இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளது. கடற்படையினர் விதித்துள்ள இத் தடையினால் கடற்றொழிலாளர்கள் எதிர் நோக்கும் பாதிப்புகள் குறித்து முறைப்பாட்டில் விவரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-135)

# கல்லுண்டாய் உப்பளப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடு அதிகரிப்பு

வலி.தென்மேற்கு,ஜன.6

அராலி - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் கல்லுண்டாய் உப்பளத்திற்கு சமீபமாக குப்பை கூளங்களும் கழிவுப் பொருள்களும் கொட்டப்படுவதால் இப்பகுதியில் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கழிவுப் பொருள்களை சற்றுத் தள்ளி உப்பளப் பக்கமாக போடாது பிரதான வீதிக்கு மிக அருகில் கொட்டப்படுவதால் [illegible]சிக்கும் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடுவதாகக் கூறப்படுகின்றது. அத்துடன், சுற்றுச் சூழலும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கட்டாக்காலி நாய்கள் குப்பைகளையும் கழிவுப் பொருள்களையும் கிளறிவிடுவதால் துர்நாற்றம் வீசுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தின் போது இக் கழிவுப் பொருள்களும் பொலீத்தீன் பைகளும் குடிமனைகளுக்குள் வந்து சேர்ந்துள்ளன. இப்பகுதி மக்கள் இச் சுகாதாரச் சீர்கேடு பற்றி மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியிடம் கடிதம் மூலம் முறையிட்டுள்ளனர். (ஒ 135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவுப் பெண்ணின் படுகொலையை சர்வதேச சமூகம் கண்டிக்காதது ஏன்?

## வட்டக்கச்சி பெண்கள் பேரவை விசனத்துடன் கேள்வி

வட்டக்கச்சி,ஜன.6

புங்குடுதீவு மடத்துவெளியில் இளையதம்பி தர்சினியின் பாலியல் படுகொலையை சர்வதேச சமூகமும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் ஏன் இதுவரை கண்டிக்கவில்லை?

இவ்வாறு வட்டக்கச்சி பிரதேச பெண்கள் மேம்பாட்டு பேரவை விசனத்துடன் கேள்வி எழுப்பியுள்ளது.

இளையத்தம்பி தர்சினியின் பாலியல் படுகொலையினையும், மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையினையும், யாழ். குடாநாட்டில் தமது மக்கள் மீதான அரச படையினரின் அராஜகத்தினையும் கண்டித்து நேற்றுமுன்தினம் வட்டக்கச்சியில் நடத்தப்பட்ட கண்டனப் பேரணியின் பின்னர் கண்காணிப்புக் குழுவிடம் கையளிக்கப்பட்ட கண்டன மகஜரிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

புங்குடுதீவில் இளையதம்பி தர்சினி (வயது 20) இளம்பெண் சிறிலங்கா கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கழுத்து நெரிக்கப்பட்டு கொல்லப்பட்ட சம்பவத்தை வட்டக்கச்சி பிரதேச பெண்கள் மேம்பாட்டுப் பேரவையினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இக்கொடூரமான கொலையை சர்வதேச சமூகமும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் ஏன் இதுவரை கண்டிக்கவில்லை.

தமிழர் தாயகமெங்கும் சிறிலங்கா அரசினால் குவித்து வைக்கப்பட்டுள்ள முப்படைகளும் தமிழ் மக்கள் மற்றும் தமிழ்ப் பெண்களுக்கு எதிராக வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன.

இந்தச் சிறிலங்கா சிங்கள அரசின் இனவாத மேலாதிக்கத்தையும், இன ஒடுக்கு முறையையும் சர்வதேச சமூகமும், இலங்கை சமாதான நடவடிக்கைக்கான இணைத் தலைமை நாடுகளும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் தமிழர் தாயகத்தில் குவிக்கப்பட்டுள்ள மேலதிக முப்படைகளையும் உடனடியாக அகற்ற வேண்டும் என்றும் நாம் அரசைக் கோருகின்றோம்.

தமிழீழ மண்ணிலே அரச படைகளின் கோரப் பசிக்கு இப்பெண்ணும் இரையாக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் கடந்த ஆண்டுகளில் இடம்பெற்ற, கிருசாந்தி, ரஜனி, சாரதாம்பாள் போன்ற சகோதரிகளின் பாலியல் படுகொலைச் சம்பவங்களை நினைவுபடுத்துவதாகவே உள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அடுத்து சிறிலங்கா புலனாய்வுத் துறையினராலும், ஒட்டுக் குழுக்களினாலும் மேற்கொள்ளப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகாலை எமக்கு மிகவும் அதிர்ச்சி தரும் விடயம். மனித உரிமை தொடர்பான விடயங்களில் கூடிய அக்கறை கொண்ட இவர் தாயகத்திலும் மனித உரிமை தொடர்பான அமைப்பை கட்டியெழுப்பப் பாடுபட்டவர்.

தமிழீழத் தேசியக் கூட்டமைப்பின் வெளி விவகாரக் குழுவிலும் உறுப்பினராக அங்கம் வகித்து இராஜதந்திர ரீதியான தொடர்புகளை ஏற்படுத்தி தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் மனித உரிமை மீறல்களையும், தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கான நியாயப்பாடுகளையும் சர்வதேச அரங்கில் எடுத்துரைத்த மாமனிதர். இவருக்கு எமது அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிங்கள ஆயுதப் படைத்தரப்பு தமிழ் மக்கள் தமது ஆதிக்கம், அதிகாரம் என்பவற்றின் கீழ் அடிபணிந்து நடக்கவேண்டும் என்றே எதிர்பார்க்கின்றனர். தமிழ் மக்கள் தமது உரிமைகள் தொடர்பாக பேசவோ, போராடவோ, தொடங்கியதும் அவர்கள் மீது தமது மிலேச்சத்தனத்தையும், வெறித்தனத்தையும் வெளிப்படுத்தத் தொடங்கிவிடுகின்றனர் என்பது உண்மையாகும்.

தொடர்ந்து தமிழ் மக்களாகிய நாம் சிங்களப் படைகளின் உயிர்ப் படுகொலைகளில் இருந்து எம்மைப் பாதுகாக்க ஆயுதம் ஏந்திப் போராடுவோம். (த-405)




# கோணாவில் - ஸ்கந்தபுரம் வீதி மக்களின் முயற்சியால் திருத்தம்

ஸ்கந்தபுரம்.ஜன.6

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக மோசமாகப் பாதிப்படைந்து காணப்பட்ட கோணாவில் - ஸ்கந்தபுரம் இணைப்பு வீதி பொதுமக்கள் மற்றும் ஸ்கந்தா விளையாட்டுக் கழக இளைஞர்களின் கூட்டு முயற்சியில புனரமைக்கப்பட்டுள்ளது.

இப்புனரமைப்புப் பணிக்கு இப்பிரதேசத்தில் உள்ள மூன்று உழவு இயந்திரங்கள் சேவை செய்தன. கிராம அலுவலர்கள் , அரசியல்துறையினரும் இப்பணியில் கலந்துகொண்டனர்.

எந்த ஒரு புனரமைப்புப் பணியும் மேற்கொள்ளப்படாது காணப்பட்டஇவ் வீதியை தமது முயற்சியின் மூலம் மக்கள் சிரமதானம் செய்ததால், பயணிகளின் சிரமம் ஓரளவு குறைந்துள்ளது. (த-381)



ஆழிப்பேரலை பேரனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் ஓராண்டு நினைவாக ஜெயபுரம் தென்னிந்தியத் திருச்சபை தூயயோவான் ஆலயத்தில் விசேட பிரார்த்தனை ஒன்று இடம்பெற்றது.

அருட் சகோதரர் ந.தே.சிவகுமார் வழிபாட்டினை நடத்துவதையும், வழிபாட்டில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: பொ.தங்கராசா)

# நீர்ப்பாசனம், வீதி அபிவிருத்திக்கு ஸ்கந்தபுரத்தில் முன்னுரிமை தரப்படும்

ஸ்கந்தபுரம்,ஜன.6

ஸ்கந்தபுரம் கிராமத்தில் இந்த வருடம் நீர்ப்பர்சனம், வீதி அபிவிருத்தி, மின்சாரம் மற்றும் ஆயுள்வேத வைத்தியசாலை அமைத்தல் போன்ற திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

கடந்த முதலாந்திகதி பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெற்ற ஸ்கந்தபுரம் கிராம அபிவிருத்திச் சங்க புதிய நிர்வாக சபைத் தெரிவின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்த நிர்வாக சபையின் புதிய தலைவராக க.பரமேஸ்வரனும், செயலாளராக இ.ஜெயப்பிரகாஸும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நீண்டகாலமாக செயற்படாமல் இருந்த கிராமிய அபிவிருத்திச் சங்கம் புதிய நிர்வாகத் தெரிவுடன் சிறப்பாகச் செயற்பட வேண்டும் என்றும்- இச் சங்கத்தின் வலுவான செயற்பாடுதான் கிராம அபிவிருத்திக்கு அவசியமானது என்றும் நிகழ்வில் கலந்துகொண்டோர் சுட்டிக்காட்டினர்.

இதில் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர், ஸ்கந்தபுரம், வன்னேரிக்குளம் ஆகிய பகுதிகளுக்கான கிராம சேவையாளர்கள், அப்பகுதி மக்கள் எல்லோரும் கலந்துகொண்டனர். (த-6-381)

# பூநகரியில் வெள்ளத்தால் ஏற்பட்ட பயிரழிவுக்கு இழப்பீடு கிடைக்கவில்லை

## அப்பகுதி விவசாயிகள் கவலை

முழங்காவில்,ஜன.6

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வேரவில், கிராஞ்சி பொன்னாவெளி போன்ற கிராமங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் அப்பகுதியில் உள்ள நெல் வயல்கள் மற்றும் சிறுதோட்டப்பயிர்கள் அழிவடைந்திருக்கின்றன.

இந்தப் பகுதிகளின் விவசாய அழிவுகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கு யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். பயிர் அழிவுகள் தொடர்பாக அங்கு எவரும் மதீப்பீடு கூட செய்யவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

எனவே, மழை வெள்ளத்தால் அழிந்து போன தமது விவசாயப் பயிர்களுக்கு உரிய இழப்பீடுகளை வழங்கி தாம் தொடர்ந்தும் விவசாயத்தில் ஈடுபட உதவுமாறு இப்பகுதி விவசாயிகள் கமக்காரஅமைப்புகளிடமும், கமநல சேவைத்திணைக்களத்தினர் மற்றும் கிராம அலுவலர்களிடமும் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். (த-323)

# பனம் பொருள் உற்பத்திக் கண்காட்சி இம்மாதம் 16ஆம் திகதி வட்டக்கச்சியில்

பரந்தன்,ஜன.6

பனைசார் உற்பத்திப் பொருள்களின் பாவனையை அதிகரிக்கும் பொருட்டு அது தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் எதிர்வரும் 16ஆம் திகதி வட்டக்கச்சியில் பனைசார் உற்பத்திப் பொருள் கண்காட்சி ஒன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடத்தவுள்ளது.

தயாகத்திலுள்ள உற்பத்தியாளர்களை இனம்கண்டு பயிர்சிகளைவழங்குவதன் மூலம் தேசிய வளத்தை முழுமையாக பயன்பாட்டிற்கு கொண்டு வரமுடியும் எனவும் -

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பனைசார் பொருள்களை சர்வதேச நாடுளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் சந்தை வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ள முடியும் எனவும் - தமிழீழ பொருண்மிய மேம்பாடு நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இதன்அடிப்படையிலேயேதமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் எதிர்வரும் 16ஆம் திகதி வட்டக்கச்சியில் பனைசார் பொருள்கள் தொடர்பான கண்காட்சி நடத்தப்படவுள்ளது. (த-6-352)

# சமூகப் பொருளாதார நிறுவனம் சக்கர நாற்காலிகளை வழங்கியது

பரந்தன்.ஜன.6

'ரெறா ரெக்' **(Terra Tech)** நிறுவன உதவியுடன் தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் (செடோற்) யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சக்கரநாற்காலிகளை வழங்கியுள்ளது.

கடந்த மூன்றாம் திகதி கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய மண்டபத்தில், தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவன நிதி முகாமையாளர் இ.சி.ஸ்ரீபாலன் தலைமையில் இச்சக்கர நாற்காலிகளை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் க. செல்வநாயகம், கிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளை, நல்வாழ்வு அபிவிருத்தி நிறுவன திட்ட இணைப்பாளர் மு.குணரட்ணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி. இராசநாயகம் ஆகியோர் வழங்கினர்.

சக்கர நாற்காலிகள் 93, மலசல நாற்காலிகள் 27,'கெயார்' லிப்ரர் 05, ஒட்சிசன் கொன்சிலேற்றர் 05, றோலோற்றர் 16 உட்பட சுமார் 10 மில்லியன் ரூபா பெறுமதி யான பொருள்கள் இந்நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டன.

இப்பொருள்களை மாவட்ட அரசாங்க அதிபர், தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் ஆகியோர் வழங்க, நல்வாழ்வு அபிவிருத்தி நிறுவன அதிகாரிகள் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

போரினால் பாதிக்கப்பட்டு நலிந்துபோன மக்களுக்கான நல்வாழ்வைக் கருதி 'செடேற்' நிறுவனத்தால் இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு இணையாக பல அரச சார்பற்ற நிறுவனங்கள் நல்வாழ்வு அபிவிருத்தி நிறுவனம் 'செடேற்' நிறுவனம் என்பன பல நிறுவனங்களுடன் இணைந்து போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல உதவிகளைச் செய்து வருகிறது.

'செடேற்' நிறுவனம் வெளிநாட்டிலுள்ள நிறுவனங்களிடம் உதவிகளைப் பெற்று உறவுப்பாலமாக இருந்து எமது மக்களுக்கு சுகாதார வசதிக்கான பொருள்களை வழங்கி வருவது பாராட்டத்தக்கதாகும் என்றார். (த-6-352)

# முழங்காவில் பிரிவில் உள்ள வறிய குடும்பங்களுக்கு உதவி

வெள்ளாங்குளம்,ஜன.6

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முழங்காவில் கிராம சேவையாளர் பிரிவில் பெண்களை தலைமையாக கொண்ட, சிறுவர்கள் உள்ள குடும்பங்களுக்கும் வறிய பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களுக்கும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் வாழ்வாதார உதவித் தொகை வழங்கியுள்ளது.

பூநகரி முழங்காவில் அபிவிருத்தி நிறுவன அனுசரணையுடன் இப்பகுதியில் 38 குடும்பங்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபா வீதம் வருமான அதிகரிப்புக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

முதற் கட்ட உதவித் தொகையாக 20 ஆயிரம் ரூபா [illegible] தெரிவிக்கப்பட்டது. (த-415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவு அஞ்சலி

தாயின் மடியில்
28
05
1978



விண்ணுலகம் சென்றது
18
12
2004

## மகாதேவா சதீஸ்

திதி: 06.01.2006 (வெள்ளிக்கிழமை)

உங்கள் காலஞ்சென்ற அம்மம்மாவின் அருமைப் பேரனே
ஆசைப் பேரனே பேரப்பிள்ளைகள் இருந்தும்-செல்லப் பேரப்பிள்ளையாய்
வளர்ந்தீரே அவருடைய நினைவுகளை கனவாக்கி
கண்ணீர்க் காவியம் ஆக்கியது ஏன்?
சிறுவயதில் கொடிய நோயால் துடிக்கும் போது
ஏணையில் அருகில் படுத்து நேரத்துக்கு மருந்தூட்டி
இரவு பகலாக பாதுகாத்து உங்களை ஓர் ஆண்பிள்ளையாக்கிய
அம்மாவின் நினைவுகளை ஏன் ஐயா ஏமாற்றி விட்டுச் சென்றாய்!
மடியில் தவழ்ந்த முத்தே பாசத்தின் தெய்வமே அன்புச் சுடர் விளக்கே
தருமசீலனே உத்தமனே குணவாளனே குலத்தின் விளக்கே
பெறாமகனே கற்கண்டே தேனே நாங்கள் உயிருடன் இருக்க
எங்கே சென்று விட்டீர்கள் நீங்கள் போனவழிபார்க்கின்றேன்
படித்த இடம் பார்க்கின்றேன்-வேலை செய்த இடம் பார்க்கின்றேன்
ஏக்கத்தில் ஏமாறுகின்றேன் - யேசுநாதர் போல் உயிர் பெற்று
சித்தியென்று செல்லமாக அழையும் ஐயா!
திருவெம்பா என்னும் சிறந்த நாளில் சிவனிடம் ஒன்றாய் கலந்தீர்களோ
தேவர்களிடம் பூ எடுத்து போடச் சென்றீர்களோ- ஓராண்டு வந்தால் என்ன
ஏன் நினைவு எல்லாம் என் இறுதி மூச்சுவிடும் வரை உங்கள் நினைவுதான்
கொக்குவில் நந்தாவில் மனோன்மணி அம்மனின் பாத நிழலில்
உன் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கும்.........

(44938)

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். | சித்தி.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
21
08
1928



மறைவு
07
12
2005

அமரர் **முருகேசு கனகரட்ணம்**
*(ஓய்வுபெற்ற அதிபர்)*

கடந்த 07.12.2005 புதன்கிழமை அன்று இறை பதமடைந்த எமது குடும்பத்தலைவரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி நிகழ்வும் இன்று (06.01.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

95, சிவன் பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். (44884) T.P:021-2223701

# முல்லை தொழில்நுட்பக்கல்லூரி, முல்லைத்தீவு
## பதவி வெற்றிடம்

**முல்லைத்தீவு தொழில் நுட்பக் கல்லூரியில் ஏற்பட்டுள்ள பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஆறு மாதகாலத்திற்கு குறையாத குறிப்பிட்ட துறையில் பயிற்சியும், வெளிக்களப் பயிற்சியும் உடையவர்கள் தங்களது விண்ணப்பங்களை சான்றிதழ்களின் (கல்வித்தகைமை, தொழில் தகைமை) புகைப்பட பிரதிகளுடன் 16.01.2006 இற்கு முன் அதிபர், முல்லை தொழில்நுட்பக்கல்லூரி, முல்லைத்தீவு என்ற முகவரிக்கு தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ கிடைக்கச்செய்தல் வேண்டும்.

*குறிப்பு:- கற்பித்தல் அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.*

*01. வீட்டு மின் இணைப்பு -02 வெற்றிடம்*
*02. அலுமினியம் இணைப்பு - 02 வெற்றிடம்*
*03. படகு வெளி இணைப்பு இயந்திரம் திருத்தல் - 02வெற்றிடம்*
*04. தையல் (ஆண்கள் உடை தயாரித்தல் )- 02 வெற்றிடம்*

தையல் பயிற்சியில் 70 வீதமான பகுதி ஆண்கள் உடை தயாரிக்கும் பாட அலகு போதிக்கப்படவுள்ளதால் அத்துறையில் போதிய அனுபவம் கற்பிக்கும் ஆற்றல் உடையவர்களும் விண்ணப்பிக்கலாம். பயிற்சிச்சான்றிதழ் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது.

**ஆங்கில போதனாசிரியர்கள் - 02 வெற்றிடம்**

ஆங்கிலமொழி மூலப்பட்டதாரி அல்லது பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர் அல்லது G.A.Q வில் ஆங்கில பாடசித்தி அல்லது க.பொ.த உயர்தரத்தில் ஆங்கிலமொழி அல்லது ஆங்கில இலக்கியம் சித்தி

**நிர்வாக உத்தியோகத்தர் -01 வெற்றிடம்**

ஆகக் குறைந்தது க.பொ.த உயர் தரத்தில் வர்த்தகப் பிரிவில் திறமைச் சித்தியுடன் கடிதத் தொடர்பாடல் ஆற்றல் உள்ளவராகவும் உறுப்பு எழுத்துடையவராகவும் ஆங்கில அறிவு உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

கணனியில் போதிய அறிவும் அதில் கற்பித்தல் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

அரச, அரச சார்பற்ற வேறு நிறுவனங்களில் பணிபுரிவோர் அந்தந்த ஸ்தாபன தலைவருடாக விண்ணப்பிக்கப்படவேண்டும்.

*க. வைரமுத்து,*
*அதிபர்.*

(ச/47161)

# உள்ளூராட்சித் தேர்தல் குறித்த அறிவித்தல் ஜனவரி 19 இல் ஆணையாளர் தகவல்

கொழும்பு,ஜன.6

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை விகிதாசார அடிப்படையிலா அல்லது வட்டார அடிப்படையிலா நடத்துவது என்பது குறித்து மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் திணைக்களத்திற்கு அறிவிக்கவேண்டும். அவ்வாறான அறிவிப்பு கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் தேர்தலுக்கான அறிவிப்பு நிச்சயமாக ஜனவரி 19 ஆம் திகதி வெளியிடப்படும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க. தேர்தல்கள் செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது:-

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை கிரமமான காலத்தில் நடத்துவதற்கு தேர்தல்கள் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

தேர்தல்களை விகிதாசார அடிப்படையிலா, வட்டார அடிப்படையிலா நடத்துவது என்பது பற்றிய யோசனையொன்றைத் தெரிவிக்குமாறு தேர்தல் திணைக்களம் மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சிடம் கோரியிருக்கின்றது. அதற்கான பதிலை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன் அமைச்சு எம்மிடம் தெரிவிக்கவேண்டும். இல்லாத பட்சத்தில் முன்னரைப் போல் விகிதாசார அடிப்படையிலான தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் திணைக்களம் உரிய நடவடிக்கையினை எடுக்கும்.

வட்டார அடிப்படையிலான ஒரு கலப்பு முறைத் தேர்தல் நடைபெறுமாக இருந்தால் மக்கள் தமக்கு ஏற்றவாறான தலைவர்களைத் தேர்ந்தெடுக்கக் கூடிய நிலைமை உருவாகும். உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை வடக்கு- கிழக்கில் நடத்தக்கூடிய சூழ்நிலை இல்லை. எவ்வாறாயினும் இது பற்றி அப்பகுதி தெரிவத்தாட்சி அதிகாரிகளிடம் விவரம் கோரப்பட்டுள்ளது.

வாக்காளர்களின் பெயர்ப்பட்டியல் அனைத்து மாவட்டக் கச்சேரிகளிலும் மற்றும் பொது இடங்களிலும் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என்று கூறினார் தேர்தல் ஆணையாளர்.

(உ-05)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 20.06.1927 | மறைவு 07.12.2005

பருத்தித்துறை,புலோலி கிழக்கு
ஊரியவத்தை
**கஸ்பார் அந்தோனிப்பிள்ளை (முத்து)**

மாதம் ஒன்று ஆனபோதும்
ஆறவில்லை எம் இதயம்
ஈரவிழிகளுடன் அப்பா உம் நினைவு
நிலைத்திருக்கும் என்றும் எம் மனதில்
*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனை வேண்டுகின்றோம்.*

குடும்பத்தினர்.

ஊரியவத்தை,
புலோலி கிழக்கு,பருத்தித்துறை. (44929)

## வெளிநாட்டு வேலை அமைச்சு அலுவலகம் இடமாற்றம்

வலி.வடக்கு.ஜன.6

இலங்கை வெளிநாட்டுவேலைவாய்ப்புமேம்பாட்டு அமைச்சு அலுவலகம் புதிய இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு 10 இல் உள்ள டி ஆர். விஜயவர்த்தனா மாவத்தை, தபால் தலைமையகக்கட்டடம், 310, இரண்டாம் மாடி என்னும் முகவரிக்கு இந்த அலுவலகம் மாற்றப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் சம்பந்தமான தொடர்புகளுக்கு மேற்கூறப்பட்டமுகவரியில் தொடர்புகொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

# மூன்றாவது ஆண்டு கண்ணீர் அஞ்சலி
## திருமதி ரஜனி பாலச்சந்திரன்

மலர்வு 03.06.1955 | உதிர்வு 06.01.2003

முத்தான ஆண்டுகள் மூன்று தான் சென்றதம்மா!
பித்தாகத் துடிக்கின்றோம் பிள்ளைகள் நாம்
எக்காலம் தான் ஆறும் வற்றாத எம் துயரம்
இத்தரை மீதினிலே உற்றதுணை நீயே அம்மா!

உன் பிரிவால் துயர் கொள்ளும்
பாலச்சந்திரன் (கணவன்)
ஜெயகாந்த் (மகன்)
ஜெயகௌரி (மகள்)
தேவச்சந்திரன் (மருமகன்)
சுபாஜினி (மருமகள்)
எட்வின் ஜனகன், எஸ்தர் ஜனனி } பேரப்பிள்ளைகள்.

223, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(44871)

# முதலாம் வருட நினைவஞ்சலி

மலர்வு
14
10
1964



உதிர்வு
06
01
2005

## செபஸ்ரியாம்பிள்ளை டன்ஸ்ரன்

தன் நலம் பாராது பிறர் நலம் பேணி வாழ்ந்தவரே!
ஆண்டு ஒன்று மறைந்தாலும் மறையாத மதிமுகமே!
தேடிக் கரம் பிடித்த மனைவியையும்
பாசமிகு அருமை மழலைச் செல்வனையும்
பாரினிலே பரிதவிக்க விட்டு பரலோகம் சென்றீரோ!
யாருமற்ற அனாதையாக வாழ்கிறோம் ஐயா!

*இவரின் பிரிவால் துயருறும்:*
அருமை மனைவி, மகன்,
உற்றார்,உறவினர்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.*

(44890)

# முல்லை தொழில் நுட்பக்கல்லூரியில் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

பொருண்மிய மதியுரையக அனுசரணையுடன் உலக கனேடிய பல்கலைக்கழக சேவை நிதி உதவியுடன் செயற்படுத்தப்படும் முல்லை - தொழில்நுட்பக் கல்லூரியில் பின்வரும் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

01. தையல் ஆண்கள் உடை தயாரித்தல்
02. படகு வெளி இணைப்பு இயந்திரம் திருத்தல்
03.வீட்டு மின் இணைப்பு
04. அலுமினியம் இணைப்பு

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு பிரிவிலும் 25 பயிற்சியாளர்களுக்கு குறையாமல் தெரிவு செய்யப்படும். தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு போக்குவரத்து அலவன்ஸ் அல்லது துவிச்சக்கர வண்டி, பயிற்சி முடிந்து வெளியேறும் போது ரூபா 8000 பெறுமதியான தொழில் சார் உபகரணம், உலக உணவுத்திட்ட மாதாந்த நிவாரணம் ரூபா 2500 பெறுமதி ஆகியன வழங்கப்படுவதுடன் மாதாந்தம் ரூபா 750 அலவன்ஸாக அவரவர் பெயரில் சேமிப்பிலிடப்படும்.


முல்லைத்தீவு மாவட்டத்தில் தூர இடங்களிலுள்ளவர்களுக்கு பேருந்து வசதிகளும்,ஏனைய மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு தங்குமிட வசதிகளும் செய்து கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை **அதிபர், தொழில்நுட்பக்கல்லூரி, முல்லைத்தீவு** என்ற விலாசத்திற்கு 20.01.2006 இற்கு முன் அனுப்புதல் வேண்டும்.

க.வைரமுத்து,
அதிபர்.

(ச/47164)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த **கதிர்-நளினரஞ்சினி** தம்பதிகளின் செல்வப் புதல்வி துவாரகா தனது முதலாவது பிறந்தநாளை இன்று (06.01.2006) வெள்ளிக்கிழமை சுழிபுரத்திலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.



இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பாட்டி, மாமாமார், அத்தைமார், மாமிமார், அத்தான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஈஸ்வர விநாயகரின் அருள்பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றனர்.



செல்வி **துவாரகா**

தகவல் : அப்பப்பா
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழைப்பு வந்தாலும் நோர்வேயுடன் ஜே.வி.பி. பேசவேமாட்டாதாம்!

கொழும்பு, ஜன.6

இலங்கையின் அமைதி முயற்சிகளின் அனுசரணை யாளர் பொறுப்பிலிருந்து நோர்வேயை அகற்றவேண் டும், அமைதிப் பேச்சுகளை நோர்வேயில் நடத்தக் கூடாது என்பன போன்ற விடயங்களில் ஜே.வி.பி. தனது பழைய நிலைப்பாட்டிலேயே உறுதியாக இருக் கிறது.

இலங்கையின் அமைதி முயற்சிகள் குறித்து நோர்வே அனுசரணையாளர்களுடன் ஜே.வி.பி. ஒருபோதும் பேசாது. அப்படியான அழைப்பொன்று வந்தால்கூட அதனை எமது கட்சி நிராகரிக்கும்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் திட்டவட்டமாகக் கூறினார் ஜே.வி.பியின் முன்னாள் அமைச்சரும், கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத். அமைதி முயற்சிகளின் தற்போதைய நிலை குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

அமைதிப் பேச்சுகளின் முதற்கட்டப் பேச்சுகளை நோர்வேயில் நடத்தக் கூடாது. அதை ஆசிய நாடொன் றில் அல்லது இலங்கையில் நடத்தவேண்டுமென்ற உறுதியான நிலைப்பாட்டில் ஜே.வி.பி. இருக்கிறது. அரச தலைமையிடம் இதனை வலியுறுத்தித் தெரிவித் திருக்கிறோம். அதனையும் மீறி அரசு தீர்மானமொன்றை எடுக்குமாயின் அப்போது நாம் உரிய முடிவொன்றை எடுப்போம்.

நோர்வே அனுசரணையை நாம் முற்றாக வெறுக்கி றோம். அவர்கள் பக்கச்சார்பானவர்களாக இருப்ப தால் நாம் ஐரோப்பிய ஒன்றியத்திடமோ, ஏனைய நாடு கள் பல இணைந்த கூட்டமைப்பொன்றிடமோ இந்த அனுசரணைப் பொறுப்பை வழங்கலாமெனக் கூறியிருக் கிறோம். ஆனால், அரசு இது விடயத்தில் முடிவொன்றை எடுக்கத் தாமதித்து வருகிறது. அனுசரணைப்பணி அல் லது போர் நிறுத்தக் கண்காணிப்பு இந்த இரண்டில் ஒன் றையே நோர்வேயிடம் வழங்கவேண்டும்.

இப்போது நோர்வே அனுசரணையாளர்கள் இந்தப் பணிக்காக இலங்கை வந்தாலும், அமைதி முயற்சிகள் குறித்து அவர்களிடம் பேசுவதற்கு ஜே.வி.பி. தயாராக இல்லை. அதற்கான அழைப்பு வந்தாலும் நாம் ஏற்கப் போவதில்லை. - இப்படி மேலும் கூறினார் விஜித ஹேரத் எம்.பி. (எ-க)

# வட்டக்கச்சியில் கண்டனப் பேரணி

வட்டக்கச்சி, ஜன.6

அரச படைகளின் அத்துமீறல் களைக் கண்டித்து வட்டக்கச்சி பிர தேசப் பெண்கள் மேம்பாட்டுப் பேரவையினரால் நேற்றுமுன் தினம் மாபெரும் கண்டனப் பேரணி யொன்று நடத்தப்பட்டது.

வட்டக்கச்சிப் பிரதேச பொது அமைப்புகளின் அனுசரணையுடன் அப்பேரணி நடைபெற்றது.

முற்பகல் 10 மணிக்கு இராம நாதபுரம் மாகவித்தியாலய முன்றி லில் இருந்தும், வட்டக்கச்சி சில்வா வீதியின் தபால் பெட்டிச் சந்தியில் இருந்தும் ஆரம்பமாகி இருமுனை களாலும் வந்த பேரணி வட்டக்கச் சிச் சந்தையடியில் இணைந்து அங்கு கண்டனக் கூட்டமும் நடைபெற்றது.

வட்டக்கச்சிப் பிரதேச ஊரக மேம் பாட்டுப் பேரவைத் தலைவர் கா.வன் னியசிங்கம் தலைமையில் ஆரம்பமான கண்டனக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் மேம்பாட்டுப் பேரவைத் தலைவி திருமதி காசி நாதன் தேவாம்பிகை, இராமநாத புரம் மேற்கு அரசினர் தமிழ்க் கல வன் பாடசாலை ஆசிரியர் எஸ்.பரம சிவம், கிளிநொச்சி புனர்வாழ்வு நிறுவனச் செயலாளர் மு.குமாரசாமி வட்டக்கச்சிப் பிரதேச பெண்கள் மேம் பாட்டுப் பேரவைத் தலைவி திரு மதி இ.தங்கேஸ்வரி ஆகியோர் கண்டன உரைகளை நிகழ்த்தினர்.

இறுதியாக் கண்டன மகஜரை வட்டக்கச்சி பிரதேச பெண்கள் மேம்பாட்டுப் பேரவைச் செயலாளர் திருமதி யோ.நாகரத்தினம் வாசித் தார்.

இக்கூட்டத்தினையடுத்து வட்டக் கச்சிப் பிரதேச பெண்கள் மேம் பாட்டுப் பேரவையினர் கிளிநொச்சி மாவட்டப் போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழு, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் செயலகம், வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலகம் ஆகிய வற்றிக்குச் சென்று கண்டன மகஜர் களைக் கையளித்தனர்.

கண்டன மனுக்களை பேரவைச் செயலாளர் திருமதி யோ.நாகரத்தி னம் கையளித்தார். கண்டன மனு வினைப் பெற்றுக்கொண்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதி நிதி பெண்குல் பிறன்சன் தலைமைப் பணிமனைக்கு அதனை அனுப்பி நடவடிக்கைகளை மேற்கொள்வ தாக உறுதியளித்தார்.

இப்பேரணியில் பெருமளவான பெண்கள், வயோதிபர்கள், பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புக் களைச் சார்ந்தவர்கள் எனப் பெரு மளவிலானோர் கலந்துகொண்ட னர். (த-405)



திருமலையில் 5 தமிழ் மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத் தைக் கண்டித்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்றுமுன் தினம் கிளிநொச்சியில் நடத்திய பேரணியின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு மாணவர்கள் நிற்பதையும் கண் காணிப்புக் குழுவின் கிளிநொச்சி மாவட்ட பொறுப்பதிகாரியிடம் மாணவப் பிரதிநிதி ஒருவர் மகஜர் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: மு.கந்தசாமி - பரந்தன் செய்தியாளர்)

# ஆலயங்களில் இரவைக்கழிக்கும் மக்கள்

தென்மராட்சி, ஜன.6

மிருசுவில், கெற்பேலிப் பகுதி மக்கள் இரவு வேளைகளில் ஒன்று கூடி ஆலயங்களில் உறங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதிகளில் உள்ள காணிகளூடாகவே படையினர் நடமாடி வரு வதால் அச்சம் அடைந்த மக்கள் ஆலயங்களில் தங்கி வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. (ஒ-117)

# மானிப்பாய் பஸ் தரிப்பிடங்களை மீள்புனரமைப்புச் செய்ய அனுமதி

யாழ்ப்பாணம், ஜன.6

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட நான்கு பஸ் தரிப்பிடங்கள் மீள்புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்கான அனுமதியை வட பிராந்திய போக்குவரத்து சபை யின் (வடக்கு) செயலாற்று முகா மையாளர் செ.கமலநாதன் மானிப் பய்ய பிரதேச சபை செயலாளருக்கு வழங்கியுள்ளார்.

சுதுமலை சந்தியில் உள்ள நிரந் தர பஸ்தரிப்பிடம், மானிப்பாய் சென். அன்ரனிஸ் ஆலய முகப்பில் உள்ள நிரந்தர பஸ்தரிப்பிடம், மானிப்பாய் பொலீஸ் நிலைய முகப்பில் உள்ள ஒரு நிரந்தர பஸ்தரிப்பிடம், மானிப் பாய் - யாழ். வீதியில் மானிப்பாய் மருத்துவ மனைக்கு முன்பாக உள்ள பழைய நிரந்தர பஸ்தரிப்பிடம் ஆகி யவையே மீள்புனரமைக்க அனு மதி வழங்கப்பட்டுள்ளது. (ஒ-185)

# திருமலையில் கறுப்புக்கொடிகளை அகற்றினர் இராணுவத்தினர்

திருகோணமலை, ஜன.6

தமிழ் மாணவர்கள் ஐந்து பேர் படையினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து, அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் திருகோணமலை நகரின் பல இடங்களில் கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடிகளை இராணுவத் தினர் நேற்றுமுன்தினம் அகற்றி யிருக்கின்றனர்.

தமது துக்கத்தை வெளிப்படுத் தும் வகையில் கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடிகள் அகற்றப்பட் டமை நகர்வாழ் தமிழர்களுக்கு பெரும் அதிருப்தியையும், ஆத் திரத்தையும் ஏற்படுத்தியிருப்ப தாக அங்கிருக்கும் எமது செய்தி யாளர் தெரிவித்தார்.

இதேவேளை, இராணுவத்தின ரின் இந்த அடாவடித்தனம் குறித்து மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னரான க.துரைரட்ணசிங்கம், கிழக் குப் பிராந்தியப் பிரதிப் பொலீஸ் மா அதிபரிடம் முறையிட்டுள் ளார். (க)






## வவுனியாவில் கடந்த சனியன்று

# கடத்தப்பட்ட புளொட் உறுப்பினர் தொலைதூரத்தில் சடலமாக மீட்பு

வவுனியா - வேப்பங்குளத்தில் வைத்து கடந்த சனியன்று இனந் தெரியாதோரால் கடத்திச் செல்லப் பட்டவர் எனக் கருதப்படும் 'புளொட்' இயக்கத்தின் உறுப்பினர் மணி வவு னியாவிலிருந்து 15 கிலோமீற்றர் தொலைவிலுள்ள சிங்கள எல்லைக் கிராமமான அட்டம்பஸ்கஸ்கட என் னும் இடத்தில் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

கெப்பிற்றிக் கொலாவைப் பொலீ ஸார் இச்சடலம் கிடப்பது பற்றிய தகவலை வெளியிட்டிருக்கின்றனர்.

மணி என அழைக்கப்படும் கிருஷ் ணசாமி திருநாவுக்கரசு (வயது - 26) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவரது சடலத் திற்கு அருகில் கண்டெடுக்கப் பட்ட இவரது தேசிய அடையாள அட்டை, 'புளொட்' இயக்கத்தின் அடையாள அட்டை மற்றும் வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் என்பவற் றைக் கொண்டே இவர் அடையாளம் காணப்பட்டார் எனத் தெரிவிக்கப் பட்டது.

வவுனியா, வேப்பங்குளம் பகுதி யில் கடந்த சனியன்று இரவு பத்து மணியளவில் மணி தனது வீட்டி லிருந்த சமயம், தம்மைப் பொலீ ஸார் என அறிமுகப்படுத்திக்கொண்ட சிலர் அவரை வீட்டுக்கு வெளியே அழைத்தனர் என்றும் -

அவர் வெளியே வரவும் அவரை அந்த நபர்கள் வெள்ளை வானில் கடத்திச் சென்றுள்ளனர் என்றும் - பொலீஸில் முறைப்பாடு செய்யப் பட்டிருந்தது. (க-164)

# தெஹிவளையில் துப்பாக்கிச் சூடு இந்தியர் பலி!

கொழும்பு, ஜன.6

தெஹிவளை, காலிவீதி பகு தியில் நேற்றுமுன்தினமிரவு இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்ப வத்தில் காயமடைந்த பிரசாத் என்ற இந்தியப் பிரஜை நேற்றுக் காலை மரணமானார்.

நேற்றுமுன்தினமிரவு 9.15 மணி யளவில் இடம்பெற்ற இந்தத் துப் பாக்கிச் சூட்டில் காயமடைந்த அவர் களுபோவில வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப் பட்டு பின்னர் அங்கிருந்து கொழும்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

சிகிச்சை பயனளிக்காததால் அவர் நேற்றுக்காலை மரணமா னார்.

இது தொடர்பான விசாரணை களை தெஹிவளைப் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிஜி நாட்டவர்கள் தங்கியிருந்த வீட்டிலிருந்து பிஸ்டல்கள் மீட்பு!

## அவர்களைத் தடுத்து வைக்க உத்தரவு

கொழும்பு, ஜன.6

இரண்டு துப்பாக்கிகளுடன் சந் தேகத்தின் பேரில் கைதுசெய்யப் பட்ட பிஜி தீவுகளைச் சேர்ந்த இரண்டு பேரை இன்று வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் குசலா சரோஜினி வீரவர்தன நேற்றுமுன் தினம் உத்தரவிட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நீதி மன்ற அனுமதியுடன் கறுவாக்காடு பகுதியிலுள்ள வீடொன்றை சோதனை யிட்ட கறுவாக்காடு பொலீஸார், அந்த வீட்டிலிருந்து 2 பிஸ்டல் களையும், றிவோல்வர் ஒன்றை யும், 129 ரவைகளையும் கைப் பற்றியிருந்தனர். அந்த வீட்டில் வைத்தே மேற்படி இரு வெளி நாட் டுப் பிரஜைகளையும் பொலீஸார் கைதுசெய்தனர்.

இவர்களை நேற்றுமுன்தினம் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன் றத்தில் பொலீஸார் ஆஜர் செய்தனர். அப்போதே மேலதிக விசாரணைக ளுக்காக இன்று வெள்ளிக்கிழமை வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் உத்தரவிட்டார்.

சென்னை மணிமேகலை பிரசுரத்தி னால் இலங்கை - இந்திய எழுத்தாளர் களின் 30 நூல்களின் வெளியீட்டு விழா அண்மையில் கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ் வில், மூத்த எழுத்தாளர். பொ.சண்முகநாதன் 'சண் அங்கிள்' என்ற பெயரில் உதயனில் எழுதிய 'நினைக்க, சிரிக்க, சிந்திக்க' தொகுப்பு நூலும் வெளியிட்டு வைக்கப் பட்டது. இந்த நூலின் முதல் பிரதியை கப்பல் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் புரவலர் காசிம் உமர் வெளியிட்டு வைக்க 'கிறீன்லண்ட்' ஹோட்டல் அதிபர் சி.அரு ளானந்தம் பெற்றுக்கொள்வதைப் படத் தில் காணலாம். நூலாசிரியர், மணிமேக லைப் பிரசுர நிர்வாக இயக்குநர் ரவி. தமிழ [illegible] ஆகியோர் நடுவில் காணப்படு கின்றனர். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் ஸ்ரார் அக்கடமி

கண்டி வீதி, சாவகச்சேரி.

வடமராட்சி, தென்மராட்சி முன்னணி ஆசிரியர்களுடன் கல்வியாண்டு - 2006

**தரம் 3 தொடக்கம் O/L வரை**

ஆரம்பம் - 06-01-2006
வெள்ளி பிற்பகல் 3.30 மணி.

மேலதிக விவரங்களுக்கு:
**0779771914**

(சி/47224) (24)


### பாராட்டுகின்றேன்

பெருந்தொகைப் பணமும் நகைகளும் முக்கிய ஆவணங்களும் உள்ளடக்கிய எனது தொலைந்த பையைக் கண்டெடுத்து ஒப்படைத்த பெருமைக்குரிய ந.நகுலேஸ்வரன் (கிளிநொச்சி பாண்டியன் வாணிபம்) என்பவருக்கு என் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இ.அகிலன்,
வெள்ளாங்குளம்.

(சி/47209)(32-21)


### தேவை

யாழ்.நகரில் இயங்கும் சன்றைஸ் மெடிகிளினிக்/ யாழ்.பேபி நீட்ஸ் என்பவற்றிற்கு பின்வரும் பதவிக்கு ஆள்கள் தேவை.

1. கொம்பியூட்டர் ஒப்பரேட்டர் - பெண்
2. மருந்து வியாபாரம் செய்பவர் - ஆண்/ பெண்
3. சிறு பிள்ளைகளின் உடைகள் வியாபாரத்தில் அனுபவம் உள்ளவர்கள் - பெண்

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

நேர்முகத்தேர்வு: 08.01.2006 (ஞாயிறு) 11 மணி
இடம்: சன்றைஸ் மெடிக்கிளினிக் (பஸ் ஸ்ராண்ட் முன்பாக)
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(44993)


## பட்டப்பின் படிப்புகள் பீடம்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## பரீட்சைகள் பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிட்ட கற்கைநெறிகளுக்கான பரீட்சைகள் பின்வரும் திகதிகளில் ஆரம்பமாகும்.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா (பகுதி நேரம் 1, முழு நேரம்) - 09.01.2006
பட்டப்பின் கல்வி டிப்ளோமா (பகுதி நேரம் 2) - 16.01.2006
பண்பாட்டியலில் முதுகலைமாணி (மீள் பரீட்சை) - 16.01.2006
கல்வியியல்மாணி - 17.01.2006

அனுமதி அட்டைகள் பட்டப்பின் படிப்புகள் பீடத்திலும் வவுனியா வளாகத்தில் கற்கைநெறியை மேற்கொள்ளும் மாணவர்கள் வவுனியா வளாக வியாபாரக் கற்கைகள் பீடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

05.01.2006 [சி-47236][21.18.19] - *பதிவாளர்.*

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 08 - 11 - 1938
மறைவு 11 - 12 - 2002

### கிருஸ்ணபிள்ளை செல்லத்துரை

*திதி -பூர்வபட்ஷ அட்டமி - 06.01.2006*

*மூன்றாண்டு சென்றதுவே ஐயா உன் நினைவால்*
*மூழ்கிறோம் துயரக்கடல் இன்னும் தாண்டவில்லை*
*முத்தான உன் வடிவம் முழுநிலவாய் தெரிகின்றதே*
*சத்தியம் எமது உயர்வான வாழ்வுக்கு சாற்றினோம் இப் பாமாலை*

என்றும் நீங்கா நினைவில்
மனைவி - **மகேஸ்வரி**, மகள் - **ஜெயராணி** (கனடா).
மருமகன் - **விஸ்வலிங்கம்** (கனடா).
பேரப்பிள்ளைகள்- **ஜெபிதா, கவிதா, சுகந்தரதாஸ், ஜெகஜீவன், விதுஷன்** (கனடா)

*மகாத்மா வீதி,*
*அல்வாய் வடக்கு*

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 22 - 08 - 1937
உதிர்வு 06 - 01 - 1994

### அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்

(உரிமையாளர் அம்பிகா டிஸ்பென்சறி)

*மனித வாழ்வு நிலையற்றது ஆனால்*
*மனிதன் வாழ்ந்த முறையால் அவன்*
*வாழ்வு என்றும் நிலையானதாகிறது*
*எங்கள் குடும்பத் தலைவரே!*
*உங்கள் பூதவுடல் அழிந்தாலும்*
*நீங்கள் என்றும் எங்களுடன் வாழ்கின்றீர்கள்.*

அம்பிகா டிஸ்பென்சறி,
சாவகச்சேரி.

(44933)
(21.17.45)

- **குடும்பத்தினர்**
சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.


சீட்டிழுப்பு இல. **1673**

Shanida Vasanawa

04.01.2006 ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

**வெற்றி எண்கள்** சுப்பர் எண்

**34 45 60 64 (08)**

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 200864884 இலிருந்து 200881362

**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 67,09,850/- வெல்லப்படவில்லை**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 67,09,850/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 28 | 5,000/- | 1,40,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 404 | 1,000/- | 4,04,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,312 | 500/- | 6,56,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 19,914 | 40/- | 7,96,560/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 18,985 | 20/- | 3,79,700/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,82,842 | 10/- | 28,28,420/- |
| மொத்தம் | 3,23,487 | | 72,04,680/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம், பைசிக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 77,04,680/- |

தொடர் இல. 300819042 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கெட்டுக்கள் 2006 ஜனவரி 07 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

**இந்த சனிக்கிழமை**
**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 75,20,150/-**

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கல் அடங்கிய பரிசு முறியை வென்றெடுத்த 5 டிக்கெட்டுக்களின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 200868453-9-41 |
| மொனராகலை | 200873903-4-57 |
| திருகோணமலை | 200872595-9-82 |
| பொலன்னறுவை | 200865169-2-49 |
| காலி | 200874535-5-89 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

06.01.2006



இமையாணனைச் சேர்ந்த **விஜயரட்ணம் விஜயகலா** தம்பதியினரின் செல்வப்புதல்வி துஷ்யந்தி தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (06.01.2006) வெள்ளிக் கிழமை தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அண்ணன் ஹரிகரன், அம்மா, அப்பா மற்றும்

### விஜயரட்ணம் துஷ்யந்தி

அப்பம்மா, அம்மம்மா, பெரியம்மாமார், பெரியப்பாமார், அன்ரி, மாமிமார், மாமாமார், அக்காமார், அண்ணாமார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் இமையூர் முருகன் அருளால் நற்கலைகளும் கற்று நலமுடன் நற்பெண்மணியாக நாளும் திகழ்ந்திட வாழ்த்துகின்றனர்.

*இமையாணன் கிழக்கு,*
*பாடசாலை வீதி,*
*உடுப்பிட்டி.*

(44997)(21.19.18)

*தகவல்:*
K.**விஜயரட்ணம்**
*(அப்பா).*

## கூட்ட நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் ஜன.6

யாழ்.இந்துசமயப் பேரவையின் பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பேரவைத் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

பேரவையின் துணைத் தலைவர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மறைந்த பேரவைத் தலைவர் சி.விநாசித்தம்பியின் அருள் நிலைப்பேற்றை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் இடம் பெறும். (202)

* *

யாழ்ப்பாணம், ஜன.6

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய பொதுச்சபைக் கூட்டம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (202)

* *


குருநகர், ஜன.6

நல்லூர் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் கோட்டக்கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் நல்லூர் கோட்டப் பாடசாலை அதிபர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் கே.வி. குணசேகரம் கோரியுள்ளார். (ஒ-51)

## மரண அறிவித்தல்

### காந்தரூபசிங்கம் கமல்ஜித் (ஜித்தன்)

*(நெடுங்கேணி மகாவித்தியாலய ஆசிரியர்)*



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காந்தரூபசிங்கம் கமல்ஜித் 03-06-2006 ஆம் திகதி காலமானார்.

அன்னார் காந்தரூபசிங்கம் - பத்மாவதி தம்பதியரின் அன்பு மகனும் மஞ்சுளாவின் அன்புக் கணவரும் திருநாவுக்கரசு, அமரர் சிவமணி (வேலணை) ஆகியோரின் பாசமிகு மருமகனும் கமல்ராஜ் (பிறின்ஸ் ஹோட்டல், வவுனியா), கமல்நாத்(டேன்ரி விற்பனைப் பிரதிநிதி - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற யூலிஸ், மெனிக்கா, காலஞ்சென்ற கனகசபை ஆகியோரின் பேரனும் பந்துசேனன், ஜெயசேனன் (வெள்ளை), தர்மசேனன்(தறுமு), கருணதாஸ் (குட்டி), சௌந்தரநாதன்(ரவி) ஆகியோரின் பாசமிகு மருமகனும் சித்திராதேவி, பிறேமிளா ஆகியோரின் பெறாமகனும் வேதநாயகம், சறோஜினி ஆகியோரின் பாசமிகு மருமகனும் கோணேஸ்வரன் (ஜேர்மனி), கேதீஸ்வரி(கனடா), விக்கினேஸ்வரன்(டென்மார்க்), சர்வேஸ்வரி(ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-01-2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.02, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.
தொ.பே.0776339272

(44992)(21.19.18.26)

தகவல்:
தாயார், சகோதரர்கள்

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை பேரின்பநாயகம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

தெல்லிப்பழை, வறுத்தலையைப் பிறப்பிடமாகவும் அச்செழுவை வதிவிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் தம்பிப்பிள்ளை பேரின்பநாயகம் 04.01.2006 புதன்கிழமை கனடாவில் காலமானர்.

அன்னார் தப்பிப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியினரின் மகனும் சின்னையா - பூரணம் தம்பதியினரின் மருமகனும் திருமலரின் பாசமிகு கணவரும் திருநாயகம் (அமெரிக்கா), நவமலர் (கனடா), லோஜினி (கனடா), ஜீவநாயகம் (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும் கலாவதி (அமெரிக்கா), சரத்சந்திரன் (கனடா), முரளிதரன் (கனடா), வாசுகி (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஷெசாணி (U.S.A.), சப்றினா (கனடா), அர்ஜீனா, திவாகரன், லாவன்யா, ஜெனோஜினி, மிதுலன், மேனகன் ஆகியோரின் பேரனும் சின்னத்தம்பி வர்த்தகர், கனகசபை வர்த்தகர் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான கந்தையா, திருமதி சுப்பிரமணியம், திருமதி மாணிக்கம் கந்தையா, திருமதி சேதுப்பிள்ளை நாக லிங்கம், திருமதி கனகம்மா கனகரத்தினம், லெட்சுமி பொன்னம் பலம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.01.2006) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்செழு,
நீர்வேலி.
*077 6365847.*

(44994)(21.18.19)

தகவல்:
**கனகசபை**
*(மைத்துனர்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளியற் கல்லூரி

(கிளை நிறுவனம்) கே.கே.எஸ். றோட் - இணுவில்

**A/L 2008 கணித, உயிரியல்**

யாழ்.நகரின் பிரபல கல்லூரி ஆசிரியர்கள் இணைந்து கற்பிக்கின்றார்கள்

Physics - Mr. சிவகுமார் B.Sc.
Chemistry - Mr. செந்தில்ராஜ் B.Sc.
Biology - Mr. செந்தூர்ச்செல்வன் B.Sc.
C. Maths - Mr. விஜேந்திரன் B.Sc.

ஆரம்பம்:
09.01.2006 திங்கள் 3.30 p.m. (ப.நே.)
அனுமதியினை முன்கூட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

Note: A/L 2007
இப்பிரிவுக்கு புதிய அலகுகள் ஆரம்பமாகின்றன.
(44963)

## BARATHY சித்தன்கேணி

**A/L2008**

நடைபெறுகின்றன.

**கணித, உயிரியல்**

யாழ். நகரின் பிரபல கல்லூரி ஆசிரியர்கள் இணைந்து கற்பிக்கின்றார்கள்

PHYSICS - Mr.சிவகுமார் B.Sc.
CHEMISTRY - Mr.செந்தில்ராஜ் B.Sc.
BIOLOGY - Mr. செந்தூர்ச்செல்வன் B.Sc.
C.MATHS - Mr. விஜேந்திரன் B.Sc.

உங்கள் அனுமதியைப் பெற்றுக்கோள்ளவும்
Note: A/L2007 இவற்றுக்கான புதிய அலகுகள் ஆரம்பமாகின்றன. (44962)

## வேலைக்கு ஆள் தேவை

பதவி : உற்பத்தி அபிவிருத்தியாளர்களும், உதவியாளர்களும்

தகைமை : B.Sc.,G.C.E.A/L விஞ்ஞானம்,G.C.E.O/L விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தி

*எதிர்வரும் 11.01.2006 ஆம் திகதிக்கு முன்னர் அனுபவச் சான்றிதழ்களையும் இணைத்து விண்ணப்பிக்கவும்.*

**சர்வதேச உயிர்நுட்பு**
**BIOTEC INTERNATIONAL**
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி
(Farm School அருகில்)
(44905) (21.17.45)


**கல்விமாணி மாணவருக்கு**

தேசிய கல்வி நிறுவக, கல்விமாணி பாடநெறி 2004/2006 பகுதி I இற்கான பரீட்சைக்கு விண்ணப்பம் செய்வதற்காக யாழ். இந்துக் கல்லூரி நிலைய ஆசிரிய மாணவர்களை நாளை சனிக்கிழமை சமுகமளிக்குமாறு பிராந்திய இணைப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான திருமதி த.வில்வநாதன் கேட்டுள்ளார். (3-204)

**சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு**

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வாராந்த நிகழ்வு வரிசையில் திருவாசக விழாவும் பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்வழங்கும் நிகழ்வும் இன்று முற்பகல் 1030 மணிக்கு நடை பெறவுள்ளது.

நாயன்மார்களின் திருவுருவப்படங்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இருந்து மங்கள வாத்திய இசையுடன் செல்வச்சந்நிதி முருகன்ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறும் அங்கிருந்து மீண்டும் நாயன்மார்களின் திருவுருவப் படங்கள் சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு எடுத்துவரப்பட்டு நிகழ்வுகள் நடைபெறுமென ஆச்சிரம சுவாமிகள் தெரிவித்தார். (204-ரி)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

திருமதி புவனேஸ்வரி ஜெகதீஸ்வர சர்மா

அவர்களின் தாயார்

திருமதி

**பட்டம்மாள் கல்யாண சுந்தரக்குருக்கள்**

03.01.2006இல் காலமானதையிட்டு, துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/வடமராட்சி
மத்திய மகளிர் கல்லூரிச் சமூகம்

(44933)
(21.17.45)

## நீத்தார் நினைவில்....



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 | 05 |
| 04 | 01 |
| 1928 | 1998 |

அமரர் **இராஜரட்ணம் அருளானந்தன்**

(இளைப்பாறிய பொலீஸ் லிகிதர்)

திதி: 06-01-2006

நாள் தாவி எட்டு ஆண்டு ஆனது
நா மறக்குமோ உங்கள்
நிழலில் வாழ்ந்த காலத்தை
பேசிக் கலங்குது இன்று உறவோடு....

82/4, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(44933)
(21.17.45)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### பேரம்பலம் சீதாலட்சுமி (பூமணி)



4ஆம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் இல.41, துரைராசா வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் சீதாலட்சுமி (பூமணி) அவர்கள் 29.12.2005 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மதியாபரணம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் பேரம்பலத்தின் அன்பு மனைவியும் மகாதேவன் மற்றும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணன், வைத்தீஸ்வரன் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் கனகலிங்கம், காலஞ்சென்ற சற்குணம் மற்றும் யோகம்மா, சின்னம்மா ஆகியோரின் மைத்துனியும் சத்தியமூர்த்தி (டென்மார்க்), கமலாதேவி, நிமலாதேவி, சண்முகராசா (சுவிஸ்), உதயகுமார் (சுவிஸ்), தேவராணி, தேவராசா (கனடா), ரஞ்சிதவதனி (பிரான்ஸ்), சந்திரகுமார் (கனடா), லீலாவதி, இன்பரதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் அனுரா (டென்மார்க்), கதிர்காமநாதன் (பிரான்ஸ்), நவரத்தினராசா, சந்திரகலா (சுவிஸ்), ரேணுகா (சுவிஸ்), ஞானகரன், ரம்சியா, பிரபாகரன் (பிரான்ஸ்), லவன் ஆகியோரின் அன்பு மாமியாரும் கோகுலவேந்தன், வசந்தினி, அர்ச்சனா, பகீரதன், கஜன், தர்சன், லக்சன், கஜீபன், கதுசன், அம்முக்குட்டி(டென்மார்க்), சந்தோஸ் (டென்மார்க்), சுகிர்தா (டென்மார்க்), சாதுசன் (சுவிஸ்) விதுரா (பிரான்ஸ்), பிறான்சிகா (பிரான்ஸ்), தனுசன் (பிரான்ஸ்), சிந்துஜா, கலையரசி, கஜீந்தன், தர்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல.41, துரைராசா வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(44945)(21.[illegible])

*தகவல்:*
**பேரம்பலம்**
([illegible]).

## நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி.

### பொது அறிவித்தல்

**01.படவரைஞராகப் பதிவுசெய்தல் - 2006**

2006ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்யப்பட்டு உள்ளவர்களும் 2006ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்து கொள்ளவும். மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

**02.வியாபாரம் உரிமம் அனுமதிப்பத்திரம் - 2006**

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் 2006ஆம் ஆண்டிற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தை 2006ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி கொக்குவில்/நல்லூர் உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**03. வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச்சட்டம் பிரிவு -268 இன் பிரகாரமான அறிவித்தல்**

நல்லூர் பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில், மலகூடங்கள் என்பன கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமென்பதனை அறியத்தருக்கின்றேன். எனவே கட்டடங்கள், மதில்கள், மலகூடங்கள் கட்டுதல், புதுப்பித்தல் ஆகியவற்றிற்கு நல்லூர் பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து சபையின் முன் அங்கீகாரம் பெறல் வேண்டும் என அறியத்தருகின்றேன். முன் அங்கீகாரம் பெறாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நட்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

**04.துவிச்சக்கரவண்டி, மிருகங்களின் உரிமம் பெறல்**

2006ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டி, மிருகங்களுக்கான உரிமத்தை பங்குனி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**05.நல்லூர்/கொக்குவில் உப அலுவலக ஆதனவரி பற்றிய அறிவித்தல் 2006**

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி நடப்பு வருடம் அறவிடப்பட்ட ஆதனவரி விகிதத்தின் பிரகாரம் 2006ஆம் ஆண்டும் ஆதனவரி அறவீடு செய்யப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2006ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31-01-2006ஆம் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்கும் உரிய வரியை அந்தந்தக் கந்தாயத்தில் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதன வரியைச் செலுத்தத் தவறின், வசிப்பிடங்களுக்கும், வெற்றுக்காணிகளுக்கும் முறையே 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் விறாந்துக்கட்டணமாக வரியுடன் சேர்த்து செலுத்தப்பட வேண்டும். எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரியை 31-01-2006ஆம் திகதிக்கு முன் அந்தந்த அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**06.சூழல் பாதுகாப்பு உரிமம்**

மத்திய சூழல் அதிகார சபைத்தலைவர் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்புச்சட்டத்தின் 28ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு எனக்கு வழங்கப்பட்ட குறிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ், நல்லூர் பிரதேச சபையின் நிர்வாகப் பாதுகாப்புப் பிரதேசத்தில் 22-11-2000ஆம் திகதிய 1159/22ஆம் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் "ஆ" பகுதியில் விதந்துரைக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக, இப்பிரதேசத் தில் மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை/தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கவேண்டிய பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் நல்லூர் பிரதேச சபையின் தலைமைப் பணிமனையுடனோ அல்லது உபபணிமனையுடனோ தொடர்புகொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2006ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதையும் இத்தால் அறியத் தருகின்றேன்.

விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விவரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல்கள் இரு உப பணிமனைகளிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
02-01-2006
(அ/47213)
(26-17-45-21)

**பொன்னையா வைரமுத்து,**
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி சிறீதரன் தயாமதி அவர்களின் அன்புத் தந்தை

**கிட்டிணசாமி குணரத்தினம்** (ஆதிகோயிலடி வல்வெட்டித்துறை)

அவர்களின் மரணச்செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகிறோம். அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
வடமராட்சி வடக்கு,
பருத்தித்துறை
(44969)
(17-45-21)

பிரதேச செயலரும்
நலன்புரிச் சங்க உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும்.

மறைந்த 'மானுடக்கலை' தந்த
பிரதிமைக்கலைமாமணி கலாபூசணம்



**க.இராசரத்தினம்** அவர்களின்

**நான்காவது மாத நினைவஞ்சலியும்**
**எழுபத்தொன்பதாவது**
**பிறந்தநாள் நினைவலைகளும்**

*நான்கு மாதங்கள் உருண்டோடி விட்டன*
*நம்பவே முடியவில்லை*
*நீங்கள் எம்மோடு வாழ்ந்து கொண்டே*
*இருக்கிறீர்கள் அப்பா....*
*உயிரோவியங்களை உயிர்த்துடிப்புடன் வரைந்தீர்கள்*
*இன்று எங்கள் முன் உயிரோவியமாக இருக்கின்றீர்.*

உங்கள் பிறந்த நாள் நினைவலைகளுடன் எமது கண்ணீர் அஞ்சலிகளையும் காணிக்கையாக்கி வணங்குகின்றோம்.

சித்திரலேக ரெம்பிள் வியூ,
[illegible]வாலி தெற்கு, மானிப்பாய்.
(44950)
(17-45-21)

மனைவி, மகள்மார்,
[illegible], பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COMPUTER COURSES IIS

## New Batches Start on

| | | |
|---|---|---|
| Batch 1 [Weekend] | : 01.01.2006 | at 10.00 A.M. |
| Batch 2 [Weekday] | : 03.01.2006 | |
| Batch 3 [Weekday] | : 11.01.2006 | |
| Batch 4 [Weekend] | : 14.01.2006 | |

| பயிற்சி நெறிகள் | வழமையான கட்டணம் | சலுகைக் கட்டணம் |
|---|---|---|
| Diploma in MS Office | ~~4000/=~~ | 2000/= |
| Diploma in Desk Top Publishing | ~~4000/=~~ | 2000/= |
| Diploma in Internet Technology | ~~6000/=~~ | 3000/= |
| Diploma in Hardware Technology | ~~7000/=~~ | 3000/= |
| Diploma in Computer Programming | ~~10000/=~~ | 6000/= |
| PageMaker, CorelDRAW, Flash, Photoshop | ~~1500/=~~ | 1000/= |

சர்வதேச அங்கிகாரம் பெற்ற கணனி நிறுவனம் ஒன்றின் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
"A Centre of Excellence in Global Information Technology"
# 100, Clock Tower Road, Jaffna
T.P No. : 021 222 2831 Fax : 021 222 6933 Email : iiscc@sltnet.lk

# IBMS

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I : 01.01.2006
பிரிவு II : 02.01.2006
பிரிவு III : 11.01.2006
காலை 10.00 மணி

| கற்கைநெறி | பயிற்சிக்கட்டணம் முழுமையான கட்டணம் | சலுகைக் கட்டணம் |
|---|---|---|
| Dip. in Microsoft Office | ~~3000.00~~ | 500.00 |
| Dip. in Desk Top Publishing | ~~4000.00~~ | 500.00 |
| Dip. in Internet Technology | ~~4000.00~~ | 500.00 |
| Dip. in Hardware Engineering | ~~5000.00~~ | 1500.00 |
| Dip. in IT | | 500.00 |

Head Office: # 410, K.K.S. Road, Jaffna.
T.P. No. : 021 222 8232
Branches : • NMMV Road, Nelliady
• SangathThanal, Chavakachcheri

**HIGH SPEED INTERNET BROWSING**
நல்லைக் கந்தன் நெற் கபே
OPEN : 9.00 a.m. TO 11.00 p.m.
62, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2779
(47154)



## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சின்னத்தம்பி கருணாகரன்**
(கருணா)

மலர்வு 07-06-1973 உதிர்வு 06-01-1996

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"பொன் இல்லம்"
ஆவரங்கால், புத்தூர். (44968) (24-26-19-15) - குடும்பத்தினர்.

## அன்பான இளைஞர் - யுவதிகளே!

அன்னிய நாட்டு வேலை வாய்ப்பினை நம்பிப் பணத்தையும் காலத்தையும் வீணாக்காது சொந்த மண்ணில் சுய தொழில் செய்யவும் Hotel, Resturent போன்ற துறைகளில் தொழிற் கல்வி பெறவும் வெளிநாட்டில் வாழும் உறவுகளின் உதவியுடன் உதவ விரும்புகின் றோம்.

**PIZZA BACKARI**

Pizza Backari ஒன்றை உருவாக்க விரும்பினால் பயிற்சி ஆலோசனை வழிகாட்டல் மற்றும் Offen உட்பட தேவையான சாதனங்கள், தளபாடங்கள் நீண்டகால கடன் அடிப்படையில் வழங்குவோம்.

Hotel Management & Tourisian போன்ற துறைகளில் சுவிஸ்லாந்தில் பட்டப்படிப்பு படிக்க விரும்புவோருக்கு ஆலோசனை வழங்குவோம்.

**தேவை :** மின்சாரத் தொழில்நுட்பத்தில் தகுதி வாய்ந்தவர் தேவைப்படுகின்றார்.

**குறிப்பு :** மேற்படி தொழில்நுட்பவியலாளர் சுவிஸ்லாந்து சென்று பயிற்சி பெற விருப்பம் உடையவராகவும், தேவைப்படுமிடத்து உத்தரவாதம் வழங்கக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். [போக்குவரத்துச் செலவுகள் அனைத்தும் நிறுவனம் பொறுப்பேற்கும்]

மேலதிக விவரங்களுக்கு :

**AYINGARAN MULTI BUSINESS**
**Palaly Road,**
**Kondavil**

0777 888034 Mr.குருபரன்,
0041 (0) 762215026 Mr.லோகேஸ்வரன்(சுவிஸ்)
(44959)(26-19-15)

## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)
### இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**06-01-2006 - 11-01-2006**

முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!
☺ சக்தி குறைவு ☺ ஞாபக மறதி ☺ பயம் ☺ நடுக்கம்
☺ நித்திரைக் குறைவு ☺ ஆண்மைக் குறைவு ☺ நீரிழிவு நோய்
என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மைச் சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
**பிரபல மனோதத்துவ நிபுணர்**
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)
(சி-47223) (26-11-14)

## பொன்விழா வாழ்த்துக்கள்




**05.01.1956 - 05.01.2006**

**அருட்சகோதரி மேரி கலிஸ்றா**

இறைபதமடைந்த திரு.அலேசுப்பிள்ளை பிராஞ்சீஸ்பிள்ளை - திருமதி லூர்துமரியா பிராஞ்சீஸ்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் இறைபதமடைந்த அருட்சகோதரி மேரி பிறசன்ரேசன் (திருக்குடும்பக் கன்னியர்) அவர்களின் அன்புச் சகோதரியுமான **அருட்சகோதரி மேரி கலிஸ்றா** அப்போஸ்தலிக்க கார்மேல் சபையில் சேர்ந்து முதல் வாக்குத்தத்தம் எடுத்த 50ஆம் ஆண்டு நிறைவு விழாவை 7ஆம் திகதி தை மாதம் 2006ஆம் ஆண்டு கொண்டாடுகிறார். அன்றைய தினம் இலங்கா மாதா மடம் அச்சுவேலியில் நிறைவேற்றப்படவிருக்கும் நன்றித் திருப்பலியில் இறைபுகழ்பாடி இறைவனுக்கு நன்றியைத் தெரிவிக்கவிருக்கும் இவருக்காக நாமும் இறைவனின் ஆசீரை வேண்டுவோம்.

தகவல்:
மைத்துனர் - பி.ம.இம்மனுவேல் அடிகளார்.
(44975)(26-19-15)

## மரண அறிவித்தல்



**சின்னையா பார்வதி (அன்னாள்)**

சங்கானையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா பார்வதி 03.01.2006 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் சின்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகேஸ்வரி(பூநகரி) மற்றும் அண்ணா துரை (ஜேர்மனி), இராசேஸ்வரி (உடுவில்), சின்னத்துரை (சாவகச்சேரி),ஞானேஸ்வரி(கொக்குவில்), செல்வராஜ் (உடுவில்), மகேஸ்வரி (லண்டன்), பாலச்சந்திரன்(டோகா), காலஞ்சென்ற காண்டீபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சபாரத்தினம் (பூநகரி), பரமேஸ்வரி (ஜேர்மனி), சந்திரன்(மல்வம்), கனகாம்பிகை (சாவகச்சேரி), ஸ்ரீநாகேந்திரராஜா (கொக்குவில்), துர்க்காஜினி(உடுவில்), கமல்ராஜ் (லண்டன்), வினோதினி (தீபா-நவாலி) ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 04.01.2006 புதன்கிழமை நடைபெற்று,பூதவுடல் நல்லடக்கத்திற்காக தாவடி சேமக்காலைக்கு நண்பகல் 12 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராமலிங்கம்வீதி, உடுவில். பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## பத்திரிகையியல் டிப்ளோமா கற்கை அனுமதிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.6

யாழ். பல்கலைக்கழக ஊடக வழங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் பத்திரிகையியல் டிப்ளோமா கற்கை நெறிக்கான அனுமதிப் பரீட்சைகள் எதிர்வரும் 12ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஒ-202)

## உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஜன.6

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சைகள் எதிர்வரும் 9ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளன.

பண்பாட்டியலில் முதுகலைமாணி மீள் பரீட்சைகள் எதிர்வரும் 16 ஆம் திகதியும் -

கல்வியியல் மாணி இறுதிப்பரீட்சைகள் 17ஆம் திகதியும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தங்கள் அனுமதி அட்டைகளை இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் உயர் பட்டப்படிப்புகள் பீடத்திலும் -

வவுனியா வளாகத்தில் கற்கை நெறியை மேற்கொள்பவர்கள் வவுனியா வளாகத்திலும் பெற்றுக்கொள்ளலாம் என்று உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி அறிவித்துள்ளார்.

இதேவேளை, புதிதாக ஆரம்பமாகியுள்ள 'பிரதேசத் திட்டமிடல் அபிவிருத்திக் கற்கைகள்' என்பவற்றின் பட்டப்பின் முதுகலைமாணி கற்கைநெறிகளுக்கான நேர்முகத் தேர்வுகள் எதிர்வரும் 16ஆம் திகதி தொடக்கம் உயர்பட்டப் படிப்புகள் பீடத்தில் நடைபெறும் என்றும் -

நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
(எ-20-12)

ஓம்
ஸ்ரீராமஜெயம்



யாழ்.வண்ணை
## ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
# சுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம்

**10.01.2006**

**நாராயணன் அடியார்களே,**

ஈழத்து திருப்பதி எனப் போற்றப்படும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் விரதங்களுள் மிகவும் மகத்துவம் மிக்க ஏகாதசியில் பெரியதும் சிறப்பானதுமான சுவர்க்க வாயில் ஏகாதசிப் பெருவிழா நிகழும் பார்த்திப வருஷம் மார்கழி மாதம் 26ஆம் நாள் (10.01.2006) செவ்வாய்க்கிழமை நிகழவுள்ளது.

**மார்கழி 26ஆம் நாள் (10.01.2006)** செவ்வாய்க்கிழமை

**அதிகாலை**
*3.15 மணி சுப்ரபாதம் திருப்பள்ளியெழுச்சி*
*3.45 மணி மூலவர் அபிஷேகம்*
*4.45 மணி திருவனந்தல் பூசை திரு பாவை ஓதுதல்*
*5.30 மணி உதய பூஜை*
*6 மணி சுவர்க்கவாயில் தரிசனம்*
*சுவாமி வசந்த மண்டபத்திற்கு எழுந்தருளுதல்*

**காலை**
*9 மணி மூலவர் ஸ்நபனாபிஷேகம்*
*10.15மணி காலை சந்தி பூசை*
*10.45மணி ஆதிவேங்கடேசர் திருவீதியுலா*

**மாலை**
*4.15மணி சாயரட்சை பூசை*
*4.30 மணி இரண்டாம் காலப் பூசை*
*5 மணி வசந்த மண்டப பூசை, சுவாமி திருவீதியுலா*

காலை 6 மணி சுவர்க்கவாயில் தரிசனத்தைத் தொடர்ந்து அன்று பகல் முழுவதும் அடியார்கள் அர்ச்சனை வழிபாடுகளைச் செய்யலாம்.
இரவு 8 மணிமுதல் அதிகாலை 4 மணிவரை கூட்டுப் பிரார்த்தனை, சொற்பொழிவு, கலை நிகழ்ச்சிகள் ஆகியன நடைபெறும்.

### துவாதசி உற்சவம்

மார்கழி 27ஆம் நாள் (11.01.2006) புதன்கிழமை
*அதிகாலை 3 மணி சுப்ரபாதம்*
*3.20 மணி திருப்பள்ளியெழுச்சி*
*3.30 மணி மூலவர் அபிஷேகம்*
*4.30 மணி திருவனந்தல் பூசை திருப்பாவை ஓதுதல்*
*5.15 மணி உதயபூசை*
*5.30 மணி காலை சந்தி பூசை*
*5.45 மணி வசந்த மண்டப பூசை, சுவாமி திருவீதியுலா*

அடியார்கள் பால், இளநீர்,துளசி, பூவகை, அபிஷேக பூஜை திரவியங்களை உபகரித்து சுவர்க்கவாயில் தரிசனம் கண்டு ஸ்ரீலக்ஷ்மி விலாச சம்பன்னராக வாழ்வீர்களாக.

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
ஆதீன மஹாசபை.
வண்ணை - யாழ்ப்பாணம்.

**ஆதீன மகாசபை**
*தொலைபேசி .021 222 2476.*

(C/47218) (நாட்டின் சூழ்நிலைக்கேற்ப நேரமாற்றம் செய்யப்படலாம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## மகாதேவன் சதீஸ்



(ஒப்புநோக்குநர் - உதயன்)

அன்னை மடியில் 28.05.1978 ஆண்டவன் அடியில் 18.12.2004

திதி : 06.01.2006

பாசம் நிறைந்தவனே ஒரு வருடம் ஆனது
பால் வடியும் உனதுருவம் கண்டு
எங்கள் செல்வம் ஒரு நொடியில்
எங்கள் எல்லோரையும் விட்டுச் சென்று
கண்மணியே உனை எம் கண்களிலே ஏந்தி
அழுகின்றோம் வாடுகின்றோம்.

உடையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (45055) (22-11-34)

உன் பிரிவால் வாடி வதங்கி ஏங்கி நிற்கும்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பிலோமினா (பொன்மணி) சாமிநாதர்

அச்சுவேலி, பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிலோமினா (பொன்மணி) சாமிநாதர் 01.01.2006 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாமிநாதரின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற ராசேந்திரம் அன்னம்மாவின் செல்வப் புதல்வியும் காலஞ் சென்ற பிரான்சிஸ், மரியதாஸ் (துரைசிங்கம்), யேசுதாஸன் (ராசிங்கம்), வெண்டக்கோன் ஆகியோரின் அருமைச் சகோதரியும் பஸ்ரியாம் பிள்ளை மனோகரி, மனோராணி, றஞ்சினி, பீற்றர், மல்லிகா ஆகியோரின் பாசமிகு தாயும் வெரோணிக்கா, வென்சஸ்சிலோஸ், ராஜ்குமார், பாலச்சந்திரன், சுதாஜினி, ஜெராட் ஆகியோரின் அன்பு மாமியும் அருண், நீகன், கிறிஸ்சாந்தி, ஜோன்சன், யோகா, அன்ஜனா, அன்ரோ மனோஜ்குமார், கிறிஸ்ரி, அரோவின், ஏஞ்சலின், இலேன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (05.01.2006) வியாழக்கிழமை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டு அஞ்சலிக்காக இன்று (06.01.2006)வெள்ளிக்கிழமை இல. 38, சப்பல் வீதி, யாழ்ப்பாணத்தில் வைக்கப்படும்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

T.P.: 077 6030813, 077 3604146 (45000) (54-12-16)

தகவல்: பிள்ளைகள், மருமக்கள்.

## சரவணமுத்து தயானந்தம் (கிச்சி அண்ணா)



உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து தயானந்தம் அவர்கள் நேற்று (5.1.2006) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பையா - பாக்கியம் தம்பதியரின் மருமகனும் நற்குணானந்தன் காலஞ்சென்ற சற்குணானந்தன், ஜெயானந்தன் (கனடா) ஆகியோரின் மூத்த சகோதரனும் கமலேஸ்வரன் (கனடா), கோணேஸ்வரன், கணேஸ்வரன், இராமேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் யசோதாதேவி (கனடா), வசந்தகுமாரி, காலஞ்சென்ற மாலினி ஆனந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிமன் (கனடா), லக்ஷ்மன் (கனடா), சுமன் (கனடா), பிரசன்னா, கௌசிகன், லக்ஷ்சிகா, சர்வேஸ், ஹம்சிகா, யாதவி, பிரதீஷ், நிருஜன் ஆகியோரது அருமைப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சிங்கம்லேன், உடுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை (07.01.2006)சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் பூவோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிங்கம் லேன், உடுவில் (45051) (54-12-16)

தகவல்: மனைவி, மக்கள்.

## சதாசிவக்குருக்கள் அண்ணாச்சாமி ஐயர்

ஆவரங்கால் சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவக்குருக்கள் அண்ணாச்சாமி ஐயர் அவர்கள் நேற்று (05.01.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் தாக்ஷாஜனி அம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சாமிக்குருக்கள் மற்றும் நடராசக்குருக்கள் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஸ்ரீமகாதேவன் (வைத்திய அதிகாரி, பண்டாரவளை), பஞ்சாபகேச சர்மா, மறைக்காடர் (ஆசிரியர் - அச்சுவேலி மத்தியகல்லூரி), சத்தியோயாதசர்மா (முன்னாள் இணைப்பாளர்-றெட்பாணா), கல்யாணி, சுந்தர்ராஜன், கௌரி (ஆசிரியை - பாக்கிய வித்தியாலயம் - மாத்தறை) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2006) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் ஆவரங்கால் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்கோயிலடி, ஆவரங்கால். (45056) (54-12-16)

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி நடராசா (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

சுண்டிக்குளத்தைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கு உலவிக்குளம் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நடராசா அவர்கள் 04.01.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும் சிவேஸ்வரியின் பாசமிகு கணவரும் ஜெசிபா, ஜெசிந்தினி (பிரான்ஸ்), அனுசியா, ஐங்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விக்கினேஸ்வரன், கனகரத்தினம், செல்வநாயகம் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலி தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று (05.01.2006) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் அச்சுவேலி தெற்கு முடிகள் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. (சி-47241) (54-12-16)

தகவல்: க. விக்கினேஸ்வரன் (மருமகன்).

# கிட்டு நினைவுப் போட்டி பிற்போடப்பட்டது

கிளிநொச்சி, ஜன.6

கேணல் கிட்டு நினைவாக வடக்கு -கிழக்கு மாவட்டங்களின் அணிகளுக்கிடையில் இன்று முதல் கிளிநொச்சியில் நடத்தப்படவிருந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது.

புறச்சூழ்நிலை காரணமாக இப் போட்டி பிற்போடப் பட்டுள்ளது என்றும்- புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் அ.இன்பன் தெரிவித்தார்.

(3-352-203)

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
A/L2007 CHEMISTRY INORGANIC
ஆரம்பம் -இன்று 3.30 p.m.
Mr. Y. மகிழ்னன் B.Sc.
A/L 2008, கலை,வர்த்தக கணிதப் பிரிவு ஆரம்பம் நேர அட்டவணை அலுவலகத்தில்.
Gr. 1 முதல் O/L வரை
English Medium
6+7

பொங்கலை முன்விட்டு மலிவு விற்பனை
கொப்பிகள் - 90/=
A.C.D - 50/=
M.P3 - 60/=
NOKIA போன் உபகரணங்களும் உண்டு
4 C.D க்கு மேல் எடுப்பவர்களுக்கு 1 C.D இலவசம்
(கடையும் வாடகைக்குண்டு)
தொடர்பு: ஸ்ரீ காமாட்சி வெல்கம்
இல. 978, K.K.S. வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
(44991)

ஆவண உதவியாளர் போட்டிப் பரீட்சை வகுப்புகள்
பொது விவேகம், பொது அறிவு } த. தவசேகர்
மொழியும் கிரகிப்பும் பா. மகாலிங்கசிவம்
சனி, ஞாயிறு தினங்களில்
D.M.I வெலிங்டன் சந்தி 11.00 - 1.00
Subra சித்தன்கேணி 5.00 - 7.00
கிறிஸ்ரல் நெல்லியடியிலும் நடைபெறுகிறது.
(44872)

ராஜா யாழ்ப்பாணம்
உங்கள் சத்தியராஜ் (இருவேடம்)
சங்கவி, ஆனந்தராஜ் நடித்த
அய்யர் I.P.S
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.00 மட்டும்

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
அர்ஜுன், நமிதா, வடிவேல்
ஆணை
காட்சி நேரம்: 10.30, 2.00, 5.15, 8.15



நாகம்ஸ் சுன்னாகம்
சிலம்பரசன் நடித்த
தொட்டி ஜெயா
தினசரி: புதியநேரம் 10.30, 2.30, 5.30

மனோகரா யாழ்ப்பாணம்



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, த்ரிஷா, வடிவேல் நடித்த
ஆறு

## வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்

### மணல் விநியோக அறிவித்தல்

07.01.2006 சனிக்கிழமை அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் புதன்கிழமை குறிப்பிடப்பட்ட மணல் அனுமதிப்பத்திரம் உடையவர்களுக்கு மணல் விநியோகிக்கப்படும்.

நிர்வாகம், மணல் விநியோகப் உபயகதிர்காமம். (45000) (54-12-16)

# ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 13-02-1927 மறைவு 30-01-2005

## அமரர் தம்பு கந்தையா

எங்கள் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
உறுதுணை புரிந்த எங்கள்
அன்புத் தெய்வத்தின் ஓராண்டினை
நினைவு கூருகின்றோம்.

மீசாலை வடக்கு, மீசாலை. (45059) (54-12-16)

- குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவு

பிறப்பு 13 - 05 - 1968



இறப்பு 07 - 12 - 2005

## அமரர் முருகையா சுரேஸ்குமார்

இன்று (06.01.2006) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.71, பெரிய தம்பிரான் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (45065) (54-12-16)

- குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## வே.க.பாலசிங்கம் (கலாபூசணம், ஓய்வுபெற்ற ஆசிரியர்)



கலைமகள் வீதி,அரியாலையைப் பிறப்பிடமாகவும் செந்தில்பதி,பொலிகண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர்- கலைமகிழ்னன் வே.க.பாலசிங்கம் நேற்று(05.01.2006) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான வே.கந்தையா, திருமதி வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் பவளத்தின் (ஆசிரியை) அன்புக் கணவரும் அன்ரன் வல்லிபுரம், அமரர் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரபாகரன்,பிரபாரஞ்சினி, ஆகியோரின் அன்புத் தந்தையும் நகுலமாலா,புவனேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் திருமதி செல்லக்கண்டு, திருமதி இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரணவன், பாணுப்பிரியன், சாகித்தியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று(06.01.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-47243) (54-12-16)

தகவல்: பா.பிரபாகரன்(மகன்) யா/சிதம்பராக் கல்லூரி.

## திருமதி சின்னத்துரை அன்னரத்தினம்



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை -அன்னரத்தினம் நேற்று (05.01.2006) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் முருகேசு தங்கம்மா தம்பதியரின் மகளும், சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நவரத்தினம் காலஞ் சென்ற குணரத்தினம், நேசரத்தினம், காலஞ் சென்ற ஞானரத்தினம், பவளரத்தினம், யோகரத்தினம், ஆகியோரின் சகோதரியும் சரோஜினி, காலஞ்சென்ற சிறீதரன் ஆகியோரின் தாயும் தங்கராசா (ஓய்வுபெற்ற சுகாதார பரிசோதகர்), புஸ்பமலர் (கனடா) ஆகியோரின் மாமியும் சுதர்சன் (பிரான்ஸ்), முகுந்தன் (ஜேர்மனி), சுகன்யா (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற சுஜீவன், ஜதீபன், சயீபன், அர்ச்சனா, சந்துரு, நிசானி, சதுசன், அபிலாஸ் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2006) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2 மணிக்கு பூதவுடல் ஏழாலை உசத்தியோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை வடக்கு, ஏழாலை. (45068) (54-12-16)

தகவல்: திரு. திருமதி தங்கராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறையில் கொலையுண்டவர் தமிழ்த்தேசியத்தின் ஆதரவாளர் எனத் தகவல்



ஊர்காவற்றுறையில் நேற்றுமுன் தினம் சுட்டுக்கொலை செய்யப்பட்டவர் தமிழ்த் தேசிய ஆதரவாளர் என்றும் - அவரை ஈ.பி.டி.பியினர் சுட்டுக்கொன்றனர் என்றும் இணையத்தளம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டிருந்தது.

போர்நிறுத்த காலத்தில் தமிழ்த் தேசியத் தேசியப்பணியில் அவர் உழைத்தவர். முன்னர் போராட்டப்பணியில் ஈடுபட்டிருந்த அவர், ஸ்ரீலங்கா படையினரின் தாக்குதலில் தலையில் காயமடைந்து சில வேளைகளில் இயல்பான நிலையில் இருப்பதில்லை.

ஸ்ரீலங்கா கடற்படையினரால் கடல் பிரதேசத்தில் இவர் தாக்கப்பட்டும் உள்ளார். ஊர்காவற்றுறையில் வசித்து வந்த அவரை நேற்றுமுன்தினம் இரவு அவரது வீட்டிற்குள் நுழைந்த ஈ.பி.டி.பியினர் சுட்டுப்படுகொலை செய்தனர் - என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், நேற்று வெளியான பத்திரிகைகளில் ஊர்காவற்றுறையில் கொலையுண்டவர் முன்னாள் ஈ.பி.டி.பி. உறுப்பினர் என்றும் இனந்தெரியாதோரே அவரைக் சுட்டுக் கொன்றனர் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே. (எ)

### மகாராஜா தலைவரைக் கொல்லச் சதி:

# நியாயமான விசாரணை நடத்த வற்புறுத்துகின்றது ஐ.தே.கட்சி

கொழும்பு.ஜன.06

வரையறுக்கப்பட்ட மகாராஜா கூட்டு நிறுவனத்தின் தலைவருக்கு எதிரான மரண அச்சுறுத்தல் குறித்து ஏற்றுக்கொள்ளக் கூடிய, கிரமமான விசாரணையொன்றை உடனடியாக நடத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் நேற்று அறிக்கையொன்றை விடுத்திருக்கும் ஐக்கிய தேசியக்கட்சி, ஊடக நிறுவனங்களின் தலைவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் தொடர்பில் ஜனாதிபதி மௌனம் சாதிப்பது ஏனென்றும் வினவியுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகள் ஏழிற்கும், மஹாராஜா கூட்டு நிறுவனத்திற்கும் தலைமைப் பொறுப்பை வகிப்பவருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக சில தினங்களாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. சுதந்திரமான ஊடகச் செயற்பாட்டிற்கு தொடுக்கப்பட்ட மோசமான - கீழ்த்தரமான அச்சுறுத்தலாக இதனைக் கருதும் நாம் இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-க)

## பேச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா, அரசின் இந்த நிலைப்பாட்டை அறிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

அமைதி முயற்சிகளை முன்னெடுக்கும் அரசின் நடவடிக்கை தீவிரமாக இடம்பெற்று வருகிறது.

பேச்சுகளை நடத்தும் இடம் தொடர்பான விடயத்தைப் பெரிதுபடுத்தி பிரச்சினை உருவாகுவதை அரசு விரும்பவில்லை. இது விடயத்தில் திறந்த மனதுடன் அரசு செயற்பட்டு வருகிறது.

அமைதி முயற்சிகளுக்கான நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் வெகுவிரைவில் இலங்கை வரவுள்ளார். அவர் வந்தவுடன் இது விடயத்தில் முன்னேற்றமான நிலை ஏற்படும். திறந்த மனதுடன் அவரை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

- இப்படி மேலும் கூறினார் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா. (எ-க)

## நகரில் முன்னிரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளில் நிலைகொண்டிருந்த படையினர் நேற்றிரவு சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். இதனால் அந்தப்பகுதிகளிலும் பதற்றம் நிலவியது.

மேற்படி பகுதிகளூடாகப் பயணம் செய்த பொதுமக்கள் தாக்குதலுக்கு உள்ளாகினர் என்றும் - கூறப்பட்டது. (எ-6)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகொலைச் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று வவுனியாவிலும் ஹர்த் தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்த அழைப்பிற்கமைய நடத்தப்பட்ட இந்த ஹர்த்தாலினால் மக்களின் இயல்பு வாழ்வு முற்றாக ஸ்தம்பிதமடைந்தது. அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள் என்பன இயங்கவில்லை.

ஏ-9 வீதி வழியாக பஸ் போக்குவரத்து நேற்று இடம்பெறவில்லை. பண்டாரிக்குளம் பகுதியில் இளைஞர்கள் சிலர் டயர்களை வீதியில் போட்டு எரித்தனர். இதன் பின்னர் பொலீஸார் சென்று அவற்றை அகற்றினர். இராணுவத்தினரும், பொலீஸாரும் வீதிகளில் நிலைநிறுத்தப்பட்டிருந்தனர்.

### அம்பாறை...

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களிலும் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கல்முனை நகரம் கடந்த சில தினங்களாக, ஹஜ்ஜுப் பெருநாள் மற்றும் தைப்பொங்கல் பண்டிகைகளுக்காக வியாபாரம் களைகட்டியிருந்த போதிலும் நேற்று வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டு நகரம் வெறிச்சோடிக்காணப்பட்டது.

அரச, தனியார் போக்குவரத்து சேவைகள் எவையும் நடைபெறவில்லை. அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் வழமையான கருமங்களில் ஈடுபடவில்லை. அரச, தனியார் வங்கிகளும் மூடப்பட்டிருந்தன. தபால் விநியோகச் சேவைகளும் இடம்பெறவில்லை.

போக்குவரத்து சேவைகள் இடம்பெறாததால் தூர இடங்களிலிருந்து தங்களது பிரதேசங்களுக்கு பயணித்தவர்கள் கால்நடையாகத் திரும்பிச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

இதேபோல் திருமலைச் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னார் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் பெரும்பாலான கடைகள் பூட்டப்பட்டு இருந்தன என அங்கிருக்கும் எமது செய்தியாளர்கள் தெரிவித்தனர். (எ-க-6)

## மகாராஜா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கல் செய்கின்றனர் என்றும் - அங்கு தெரிவிக்கப்பட்டது.

மீரிஹான பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் ஒருவர் மூலமே இந்தக் கொலைச் சதித்திட்டம் முதலில் தெரியவந்ததாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

முன்னர் கொழும்பு மகஸின் சிறையிலும், இப்போது மஹர சிறையிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் டி.எம்.பி.பி. இலங்கக்கோன் என்பவரிடமிருந்து இந்தக் கொலைச் சதித்திட்டம் தொடர்பான வாக்குமூலத்தை இன்று பதிவதற்கும் நீதிவான் அனுமதி அளித்து உத்தரவு பிறப்பித்தார். (எ-க)

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். குடாநாட்டை இலங்கை அரசின் படைகள் 1996ஆம் ஆண்டில் மீளக் கைப்பற்றியதன் பின்னர் ஏப்ரல் முதல் செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் பல நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ்ப் பொது மக்கள் படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமல் போயிருந்தனர்.

அவர்களில் ஒரு தொகுதியினர் படையினரால் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பின்னர் செம்மணிப் பகுதியில் புதைக்கப்பட்டனர் என்று கருதப்படுகின்றது.

இவ்வாறு புதைக்கப்பட்ட ஒரு டசினுக்கும் அதிகமானோரின் எச்சங்கள், எலும்புக்கூடுகள் அங்கிருந்து பின்னர் தோண்டி எடுக்கப்பட்டன.

இது தொடர்பாக ஐந்து இராணுவத்தினர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களுக்கு எதிரான வழக்குகள் முதலில் யாழ். மாஜிஸ்திரேட் நீதிமன்றில் எடுக்கப்பட்டன. ஆனால், பின்னர் வழக்கின் சந்தேக நபர்கள் ஐவரும் சமர்ப்பித்த விண்ணப்பத்தின் பேரில் வழக்கு கொழும்பு சிரேஷ்ட மாஜிஸ்திரேட் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது.

இந்நிலையில் - சம்பந்தப்பட்டோர் காணாமற்போய், படுகொலையுண்டு பத்து வருடங்களாகியும் - வழக்குத் தாக்கல் செய்து ஆறு ஆண்டுகள் கடந்தும் - இந்த வழக்கில் உருப்படியாக எதுவும் நடக்கவில்லை.

இது குறித்து, இவ்வழக்கு நேற்று கொழும்பு சிரேஷ்ட மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிவான் கடும் விசனம் தெரிவித்தார்.

''ஆறு ஆண்டுகளாகியும் குற்றப் புலனாய்வுப் பொலீஸார் இந்த வழக்குத் தொடர்பாக விசாரணைகளை முடிக்கவில்லை. சட்டமா அதிபர் சம்பந்தப்பட்ட ஐந்து சந்தேக நபர்களுக்கும் எதிராகக் குற்றப்பத்திரம் கூட தாக்கல் செய்யவில்லை. இது மோசமான நிலைமை'' - என்று நீதிவான் குறிப்பிட்டார்.

பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களான ஐந்து இராணுவத்தினரும் நேற்று நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

வழக்கு மீண்டும் மே மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

குற்றப் புலனாய்வுப் பொலீஸார் சார்பில் சப் இன்ஸ்பெக்டர் தயாரத்ன ஆஜரானார். (எ-க)

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கஜேந்திரன், யோகிததாஸ் ரொஹான், மனோகரன் வஜீகர், தங்கத்துரை சிவானந்தா ஆகியோரின் பூதவுடல்கள் இந்துமயானத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டன.

மாணவர்களைக் கொலை செய்த விவகாரத்தை ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியிடம் முறையிடுவதற்காகத் தயாரிக்கப்பட்டு மகஜருக்கான கையொப்பங்கள் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ள வந்தவர்களிடமிருந்து பெறப்பட்டன. இந்த மகஜரின் பிரதிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலைக் கிளைத் தலைவர் மற்றும் இலங்கையிலுள்ள அனைத்து வெளிநாட்டுப் பிரதிநிதி களுக்கும் அனுப்ப ஏற்பாடாகியிருந்தது. (எ-க-6)

## மரண அறிவித்தல்

### பிலிப்பையா அல்பிறெட் இராசநாயகம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது வெள்ளவத்தையில் வசித்தவருமாகிய பிலிப்பையா அல்பிறெட் இராசநாயகம் அவர்கள் 02.01.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிலிப்பையா - எலிசபெத் தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் மரியம்மா அவர்களின் அன்புக் கணவரும், சசாங்கன் (நோர்வே), சுதர்மினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் துரைராஜா (அளவெட்டி), காலஞ்சென்ற அரசரெட்ணம், அரியநாயகம் (மன்னார்), செல்வநாயகம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 08.01.2006 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு A.F. றேமண்ட் மலர்ச்சாலையில் இடம்பெற்று பூதவுடல் கனத்தை கத்தோலிக்க சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

25,6/2,E.S.பெர்னான்டோ மாவத்தை,
கொழும்பு - 6.
T.P.: 2554652 (45069)(30)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.


**A/L 2008**
கலை, வர்த்தக, கணித பிரிவுகள்
GAQ, B.A
(யாழ்.பேராதனை)
Part -I PAPER CLASS
புதிய பிரிவுகள்
ஆரம்பம்
07.01.2006
சனி பி.ப. 3 மணி
திசுர் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்

**N.C.A.**
K.K.S. Road, Inuvil.
A/L 2008
கலை, வர்த்தக, கணித விஞ்ஞானப் பிரிவுகள்
ஆரம்பம்:
07.01.2006 3 p.m
எமது வழமையான ஆசிரியர் குழு

**கணக்கீடு**
A/L 2008
ஆரம்பம்: சனி 1.00 p.m.(N.T)
A/L 2007 பங்குடமை
ஆரம்பம்: சனி 2.00 p.m.(N.T)
A/L 2006 கம்பனி முடிவுக் கணக்கு
ஆரம்பம்: திங். 6.30 a.m.(N.T)
S. தவா
B. Com (Hons) (Acc.spl)
SHAMROCK
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

**D.C.S. (நிருட்டன்)**
ஆரியகுளம் சந்தி அருகில்
யாழ்.நகர்.
A/L 2008
(வழமையான ஆசிரியகுழு)
ஆரம்பம்:-07.01.2006
சனி காலை 8 மணி (ப.நே.)
A/L 2006,2007
GAQ, B.A.
யாழ். பேராதனை வகுப்புகள் 07.01.2006 முதல் வழமையான நேரஅட்டவணைப்படி நடைபெறும்.

**BITSMANS**
கல்வி நிறுவனம்
மானிப்பாய்
GRADE 6,7,8,9
ENGLISH MEDIUM CLASSES
ஆரம்பம்:
07-01-2006
SAT. 2 P.M.
(45956)

**யூனிவேசல்**
(பா/இந்துமகளிர் கல்லூரி அருகில்)
A/L 2008
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்
06-01-2006 வெள்ளி 4 P.M
அமைதியான பாதுகாப்பான சூழலில் வகுப்புகள்
(45052)

**நாவலர்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
A/L 2008
கலை, வர்த்தகப் பிரிவுகள்


| | |
|---|---|
| கணக்கீடு | பொருளியல் |
| P.P. ரதன் | B. கஜீதரன் |
| வணிகக் கல்வி | தமிழ் |
| K.M. தாஸ் | கீர்த்திராஜன் |
| அளவையியல் | இந்து நாகரீகம் |
| P. கமல் | S. ஜெயக்குமார் |
| புவியியல் | இந்து சமயம் |
| M. இக்னேசியஸ் | B. மயூதரன் |
| அரசியல் | நாடகமும் அரங்கியலும் |
| றொபின்சன் | சுகந்தன் |


ஆங்கிலம் Y.ஜெயந்தன்
ஆரம்பம்: 07-01-2006 (நாளை)
காலை 8.30 மணி
(சி47232)

**NEW SCIENCE CENTRE**
யாழ். நகர்.
A/L 2008
CHE: அன்பழகன்
PHY: ஜெயசீலன்
பிரபா
விமல்ராஜ்
BIO: அல்போன்ஸ்
MATHS: கோணேஸ்
(45053)







EXPOAIR எக்ஸ்போ ஏயார்
your friend in the skies...
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.01.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.